விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 195 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 17 திங்கட்கிழமை (01.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## எரிபொருட்களின் விலை குறைவடைந்தன

(கொழும்பு)

நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் எரிபொருள் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

ஒக்டேன் 92 ரக ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 11 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 344 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 41 ரூபாயால் குறைக்கப்படவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 379 ரூபாய் 16

## எந்த நேரத்திலும் எத்தேர்தலுக்கும் நாங்கள் தயாராகவே உள்ளோம்
## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்




(கண்டி)

எந்த நேரத்திலும் எத்தேர்தலுக்கும் நாங்கள் தயாராகவே உள்ளோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 16

## தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்
# இரா.சம்பந்தன் காலமானார்



(கொழும்பு)

தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் உடல் நலக் குறைவால் கொழும்பில் நேற்று தனது 91ஆவது வயதில் காலமானார். (16ஆம் பக்கம் பார்க்க)

## 16ஆம் திகதி முதல் மின் கட்டணம் குறையும்

(கொழும்பு)

எதிர்வரும் 16ஆம் திகதி முதல்மின்கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலைத்திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றம் தொடர்பான 15

## ஓமந்தையில் புதையல் தோண்ட முற்பட்ட 5 பேர் கைது

(வவுனியா)

ஓமந்தை, விளாத்திக்குளம் பகுதியில் 15

## நாட்டுக்காக நான் செய்த நல்ல விடயங்களை மக்கள் நினைவுகூருவார்கள் என நினைப்பது நகைப்புக்குரியது
### தனது 80ஆவது பிறந்தநாளில் சந்திரிகா



(கொழும்பு)

நாட்டுக்காக நான் செய்த நல்ல விடயங்களை மறந்தாலும் நாட்டு மக்கள் அவற்றை நினைவுகூருவார்கள் என நினைப்பது நகைப்புக்குரியது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சந்திரிகா பண் 15

## ஊசி போடுவதற்குப் பயந்து வவுனியா வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றவர் வீதியில் சடலமாக மீட்பு

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து தப்பிச் சென்றவர் வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கோவில் புதுக்குளம், ராணி 15

## காதலிக்கு பயம் காட்டுவதற்காக கழுத்தில் கயிற்றை மாட்டிய 17 வயது இளைஞன் மரணம்
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, நந்திமித்திரகம பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் காதலிக்கு பயம் காட்ட கழுத்தில் கயிற்றை மாட்டிய நிலையில் அது இறுகியதால் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன் வவுனியா போகஸ்வேவ பகுதியைச் சேர்ந்த 17 வயது இளைஞன் 15

## சீனாவிடமிருந்து 1.5 பில்லியன் டொலர் கடன்

(கொழும்பு)

கடன் நெருக்கடியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள திட்டங்களுக்காக சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியிடமிருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு 15

## இரணைமடுக்குளத்தில் காணாமல்போன சிறுவன் நேற்று சடலமாக மீட்பு

(முறிகண்டி)

இரணைமடுக்குளத்தில் நீராடச் சென்றபோது காணாமல் போன 14 வயதுச் சிறுவன் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முறிகண்டி வசந்தநகர்ப் பகுதியைச் சேர்ந்த செல்வரத்தினம் றுசாந்தன் (வயது-14) என்ற சிறுவனே மீட்கப்பட்டவராவார்.

கிளிநொச்சி நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர சபை, யாழ்ப்பாணம்

## கழிவகற்றல் சேவை தொடர்பான பொது அறிவித்தல்

மாநகர சபையின் எல்லைக்குள் 01.07.2024ம் திகதி தொடக்கம் 30.06.2025ம் திகதி வரையான காலப்பகுதியில் திரவக் கழிவு மற்றும் மலக்கழிவு அகற்றல் சேவை வழங்குவதற்காக சபையின் வாகனங்களிற்கு மேலதிகமாக பின்வரும் சேவை வழங்குநர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த சேவைகளிற்கான அனுமதிச் சிட்டைகளை (TOKEN) அலுவலக நாட்களில் பொது சுகாதார பொறியியற் பிரிவில் விண்ணப்பித்து முன்னரங்க அலுவலகத்தில் பி.ப 3.00 மணி வரை கொடுப்பனவை மேற்கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

2023.06.02ம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி இல-2335 இல், யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் உணவுக்கழிவுநீர் லீற்றர் ஒன்றுக்கு ரூ.0.90 சதமும் மலக்கழிவுநீர் லீற்றர் ஒன்றுக்கு ரூ.1.55 சதமும் கட்டணமாக அறவிடப்படுகிறது.

சேவை வழங்குநர் விபரம் வருமாறு.

| சேவை வழங்குநர் பெயர் | வாகன இலக்கம் | கொள்ளளவு லீற்றர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| திருமதி ப.புனிதா | RE-0460 | 4000 | 077 353 6755 |
| திருமதி.கு.சிவானுயா | RZ-5120 | 4000 | 077 326 8667 |
| திரு.வி.சுகுமாரன் | RC-9043, RX-2460 | 4000 | 077 773 0597 |
| திருமதி.உ.பிரமிளா | RE-0113 | 5000 | 077 901 3863 |
| திரு.கு.விக்கினராசா | 36 Sri7705 | 5000 | 077 331 3671 |
| திருமதி.அ.சகாயினி | RE-7174 | 5000 | 077 166 3411 |
| திரு.வி.சுகுமாரன் | RY-7761 | 5000 | 077 773 0597 |
| திருமதி.அ.சகாயினி | LO-5090 | 6000 | 077 166 3411 |
| திரு.வி.சுகுமாரன் | LL-7868, LP-3472 | 6000 | 077 773 0597 |

தனியார் வணிக நிலையங்களில் கழிவகற்றல் சேவைக்கு பின்வரும் சேவை வழங்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| சேவை வழங்குநர் பெயர் | வாகன இலக்கம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| திரு. செல்லன் ஜெகதீஸ்வரன் | RA-1689 GN-2195 | 077 227 2503 |

மேற்குறித்த சேவை வழங்குநர்கள் தவிர்ந்த ஏனைய வழங்குநர்களிடமிருந்து சேவை பெறப்படுவதால் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு சேவை பெறுநர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

மாநகர ஆணையாளர்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

(C-0711)

# கொள்ளையுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் கைது

## 2 கோடியே 50 இலட்சம் பெறுமதியான தங்க நகைகளும் மீட்பு

(புத்தளம்)

வடமேல் மாகாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் கொள்ளையிடப்பட்டதாக கூறப்படும் தங்க நகைகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் 2 கோடியே 50 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியுடையது.

கடந்த சில மாதங்களாக கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே சந்தேகநபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீதிமன்றத்தின் உத்தரவில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போதே கொள்ளையிடப்பட்ட தங்க நகைகள் தொடர்பில் தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நுரைச்சோலை, நாகொல்லாகம, தொரடியாவ, தெதிகம, கொஸ்வத்த ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் இவ்வாறு தங்க நகைகளை கொள்ளையிட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு கொள்ளையிடப்பட்ட தங்க நகைகள் கண்டி, குருநாகல், கட்டுகஸ்தோட்டை, கேகாலை ஆகிய பகுதிகளில் உள்ள அடகு கடைகளில் அடகு வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)

# மரண அறிவித்தல்

மலர்வு
02 - 03 - 1934



உதிர்வு
25 - 06 - 2024

## கிருஷ்ணர் குணசிங்கம்

(Tea Factory Officer
மவுன்றின், வட்டவளை, பொகவந்தலாவ, ரின்சின்)

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் குணசிங்கம் அவர்கள் 25.06.2024 அன்று இறைபதமடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணர் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான புஸ்பலிங்கம், இராஜதுரை, சாம்பசிவமூர்த்தி, நவரட்ணராஜா மற்றும் குலசிங்கம், செல்வராணி, பரமேஸ்வரி, மீனாட்சிதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவநேசன்(நோர்வே), சிவரூபன், சிவதாஸ்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலதி (நோர்வே), நந்தினி, சுயந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிவேதா(நோர்வே), சுஜந்தன் (நோர்வே), நிக்சிதா (நோர்வே), விதுஷிகா, ரித்திக் (லண்டன்), ரித்திஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.07.2024ல் புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் கட்டுவன் வீதி கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீதி மன்ற வீதி,
மல்லாகம்.(நீதிமன்றம் அருகாமை) (1362)

தகவல்: குடும்பத்தினர்
077 771 7918

# யாழில் தம்மிக்க பெரேராவால் சான்றிதழ்கள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

My Dream Academy –DP Education IT Campus ஆகியன இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுத்துள்ள கோடிங் (coding) கற்கை நெறி கற்கைகளை கற்கும் மாணவர்களுக்கான தரச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளியில் இடம்பெற்றது.

DP EDUCATION நிறுவன ஸ்தாபகரும், தலைவருமான, பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, My dream academy நிறுவுனரும், பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பங்கேற்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 3000 மாணவர்கள் தமக்கான திறமைச்சான்றிதழ்களை பெற்றுக் கொண்டார்கள். (ம-7)

# கிளிநொச்சியில் வீடு ஒன்று முற்றாக எரிந்து நாசம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகி நகர் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று நண்பகல் தீடீர் தீவிபத்து ஒன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த வீட்டின் உரிமையாளர் மதிய உணவு தயார் செய்து கொண்டிருந்த பொழுது மீனை வெட்டுவதற்காக வீட்டிலிருந்து வெளியில் சென்று மீனை வெட்டிக் கொண்டிருந்த பொழுது திடீரென வீடு முழுவதும் தீப்பற்றி எரிந்ததை அவதானித்ததை அடுத்து ஓடிச்சென்று தொட்டிலில் படுத்துறங்கிய அவரது பிள்ளையை தூக்கிக் கொண்டு வெளியேறியுள்ளார்.

இதன்பின் அயலவர்கள் மற்றும் உறவினர்களின் துணையுடன் வீட்டில் ஏற்பட்ட தீப்பரவலை கட்டுப்படுத்த முயன்ற பொழுதும் வீடு முற்றாக எரிந்துள்ளது.

இதன் போது வீட்டில் இருந்த 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பணம், தொலைபேசி, 2 மீன்பிடி வலைகள், உடைகள் மற்றும் வீட்டில் இருந்த உபகரணங்கள் அனைத்தும் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டுமொரு திட்டத்துடன் நுழையும் அதானி நிறுவனம்

**(கொழும்பு)**

**கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி மற்றும் மன்னாரில் சர்ச்சைக்குரிய காற்றாலை மின்சாரத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள இந்தியாவின் அதானி நிறுவனம், இலங்கையில் மூன்றாவது திட்டம் ஒன்றையும் முன்மொழிந்துள்ளது.**

இலங்கையின் கடல் படுக்கையில் பெறுமதி மிக்க கனிமங்களை தோண்டுவதற்கான முன்மொழிவை அதானி நிறுவனம் முன்வைத்துள்ளது.

இந்த முயற்சிக்காக, அதானி குழுமம் தாய்வான் நிறுவனமான உமிகோர் தாய்வானுடன் கூட்டு முயற்சியில் இறங்கியுள்ளது.

பேச்சுவார்த்தை நடந்து வரும் நிலையில் இன்னும் இந்த இணக்கம் எட்டப்படவில்லை.

இந்நிலையில், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான கடற்பரப்பு சுரங்க உரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டதன் பின்னர், இந்தியப் பெருங்கடலின் ஆழத்தில் மறைந்துள்ள பெறுமதி மிக்க கனிமங்களைக் கண்டறிவதற்காக, இந்தியாவுடன் கூட்டுசேர்வது தொடர்பாக இலங்கையும் சிந்தித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகளின் கடல் சட்டம் தொடர்பான மாநாட்டின்படி, இலங்கை தற்போது தனது கடல் வரம்புகளை கரையில் இருந்து 200 கடல் மைல்களாக நீடித்துள்ளது.

இதன்படி சர்வதேச கப்பல் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல், கடற்கரையிலிருந்து 200 கடல் மைல்களுக்கு பிரத்தியேக பொருளாதார மண்டலத்தை பொருளாதார நோக்கங்களுக்காக செயற்படுத்த, இலங்கைக்கு பிரத்தியேக உரிமை உள்ளது.

எனவே மத்திய இந்தியப் பெருங்கடலில் கனிமங்களை தோண்டுவதற்கு இது உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது. (நி)

# பாடசாலைக்கு அருகில் கறுப்புக்கொடி போராட்டம்

(கொழும்பு)

நாடு தழுவிய ரீதியில் பாடசாலைகளுக்கு அருகாமையில் இன்று கறுப்புக் கொடி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களினால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்புப் போராட்டம் மீது கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மற்றும் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையை எதிர்த்து இன்று கறுப்புக் கொடி போராட்டமொன்று முன்னெடுக்கப்பட உள்ளது.

மேலும் பொலிஸாரின் தாக்குதல்களை எதிர்த்து எதிர்வரும் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பாடசாலைகளுக்கு எதிரில் ஆசிரியர்கள், அதிபர்கள் இணைந்து எதிர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுக்க உள்ளதாகவும் இதில் பெற்றோர்களும் இணைந்து கொள்வார்கள் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மேலும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில், எதிர்வரும் 4 ஆம் திகதி அனைத்து தொழிற்சங்கங்களையும் கொழும்பிற்கு அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கத் தவறினால் போராட்டம் தீவிரப்படுத்தப்படும்.

பொலிஸார் நடத்திய தாக்குதல்களில் 10 ஆசிரியர்கள் காயமடைந்தனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மரண அறிவித்தல்



தோற்றம்
20.05.1976

மறைவு
29.06.2024

## கந்தசாமி கருணாகரன்

(Office for National Unity and Reconciliation - Board Member, Board of Director Lanka Leyland Limited, Prison Local Committee member at Department of Prison, Board of Director at ONUR Office National Unity Reconciliation, Former SLFP Coordinator of Colombo District)

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கருணாகரன் நேற்று முன்தினம் (29.06.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கந்தசாமி (முன்னாள் உபஅதிபர் சுதுமலை தமிழ் கலவன் பாடசாலை) அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், மங்களநேசன் (முன்னாள் யாழ்.மாநகர சபை உறுப்பினர் EPDP)-ஜெசிந்தா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரியா (Merchant Bank - Jaffna) அவர்களின் அன்புக் கணவரும், தஷ்மிதாவின் (J/Chundikuliu Girls College) பாசமிகு தந்தையும், சுரேஸ்மோகன் பிரபாஜினி (Development officer-தெல்லிப்பளை), கந்தசாமி கௌசல்யா (Liberaian-Uduvil Girls College) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுரேஸ்மோகன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்-நல்லூர் பிரதேச செயலகம்) மைத்துனனும், மிதுஸ் (J/Hindu College), தருதிஷா (J/Vembadi Girls High School) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கஜேந்திரன்-ஜெயந்திமாலா (ஜேர்மனி), கிருஷாந்தன்-நூர்சியா (NSB-Jaffna) ஆகியோரின் மைத்துனரும், ஜெயரட்ணம் கஜேந்திரன் (பொறியியலாளர்-ஜேர்மனி), சிங்கராஜர் கிருஷாந்தன் (பொறியியலாளர் - CEB) ஆகியோரின் சகலனும், கஜேஸ் (ஜேர்மனி), ஜஸ்மிரா (ஜேர்மனி), ஜஷேரா (ஜேர்மனி), சஜன் (J/Bosco School) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.07.2024) இன்று திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல 43, ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்

077 790 4014, 077 731 3287
077 804 8143, 076 919 2581

(1360)

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய உதைபந்தாட்ட தொடர் வடமாகாண அணி சம்பியன்




கீதனின் இறுதிநேர அதிரடிகோலும் ஆர்நிகனின் சிறந்த கோல்காப்பும் கைகொடுக்க யாழ் மண்ணில் ஹட்றிக் வெற்றியோடு தேசிய உதைபந்தாட்ட சம்பியனாகி வரலாறு படைத்தது வடமாகாண ஆடவர் உதைபந்தாட்ட தெரிவு அணி.

48 ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான ஆடவருக்கான மாகாணங்களுக்கு இடையில் நடைபெற்ற தேசிய உதைபந்தாட்ட தொடரின் மாபெரும் இறுதிப்போட்டியானது துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் மாலை 3மணியளவில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் வடமாகாண தெரிவு அணியை எதிர்த்து மத்திய மாகண தெரிவு அணி மோதிக்கொண்ட போட்டியில் மிக விறுவிறுப்பாக நடைபெற்றது முதல்பாதி ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே ஒரு கோலினை மத்தியமாகாண தெரிவு அணி பெற்று வடமாகாண அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது.

பின்பு பலத்த ஆக்கிரமிப்பு ஆட்டத்தினை வடமாகாண அணி வெளிப்படுத்திய போதிலும் எதுவும் பலனளிக்காமல் விட முதல் 1-0 என்ற கணக்கில் மத்திய மாகாண அணி முன்னிலை பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாம் பாதி ஆட்டத்தில் சொந்த மண்ணில் கடுமையான ஆக்கிரமிப்பு ஆட்டத்தினை வடமாகணம் வெளிப்படுத்திய போதிலும் மத்தியமாகாண அணியின் பின்களம் தடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. பல வாய்ப்புகள் வடமாகாண அணியின் வீரர்களுக்கு கிடைத்த வாய்ப்புக்களை வீணடிக்க போட்டி முடிவுக்கு வர 10 நிமிடங்கள் உள்ள நிலையில் பலத்த சவால்களுக்கு மத்தியில் கீதனினால் வடமாகாண அணிக்கு அதிரடி ஒரு கோல் பெறப்பட போட்டி சூடு பிடித்தது. பின்பு எந்த வித கோல்களும் பெறப்படாமல் முடிவுக்கு வர போட்டி 1-1 என்று சமநிலையில் நிறைவு பெற்றது

வெற்றியாளரை தீர்மானிக்கும் சமநிலை தவிர்ப்பு உதையில் ஆர்நிகனின் சிறப்பான தடுப்புக்களால் வடமாகாண அணி வெற்றி பெற்று தேசிய சம்பியனாகியது. (நி-106)

# வலைப்பந்தாட்டப் போட்டியில் கிளி. முக்கொம்பன் வெற்றி





கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலய இரு அணிகள் வலைப்பந்தாட்ட வலய மட்டப் போட்டியில் வென்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

20 வயது பிரிவு முதலாம் இடத்தினையும் 16 வயது பிரிவு இரண்டாம் இடத்தினையும் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற தெற்கு வலய பாடசாலைகளுக்கு இடையிலான போட்டியிலேயே இப் பாடசாலை இரு வெற்றிகளை பெற்றுள்ளது. (நி-350)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3156

**அமீர்**




**ஜெஷானி**




**தஷ்மி**




**ராதா**




**திஷான்**




**சுதன்**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு பொலிஸ் பிரிவுகளை ஸ்தாபிக்க ஐ.நா. நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பொதுப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச ரீதியாக அதிகரித்துவரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதற்கு சிறப்பு பொலிஸ் பிரிவுகளை ஸ்தாபிப்பதற்கு ஐ.நா நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அதற்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு இலங்கை தயாராகவுள்ளதாகவும் பொதுப்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஐ.நா. பொலிஸ்மா அதிபர்கள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்முறையான மோதல்களின் எழுச்சி மோதல் வலயங்களில் பொது மக்களின் அவலநிலை, சைபர் கிரைம், ஆயுதமயமாக்கப்பட்ட தொழில்நுட்பம் போன்ற பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்களின் தோற்றம் உட்பட சர்வதேச ரீதியாக பாதுகாப்பு சவால்கள் அதிகரித்து வருகின்றமையானது சிக்கலான தன்மைகளை அனைத்து நாடுகளுக்கும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கும்பல்களின் வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமை சர்வதேச அமைதிக்கு தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

சர்வதேச பாதுகாப்புக்காக இலங்கையின் அர்ப்பணிப்பு தொடர்ந்தும் இருக்கும் என்பதோடு தற்போது தயார் நிலையில் இலங்கை பொலிஸ் பிரிவு உள்ளது. அத்துடன் இலங்கை பொலிஸ் பிரிவு தரம் மூன்றிலும் காணப்படுகின்றமை நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கும்பல் வன்முறைகளின் அதிகரித்துவரும் அச்சுறுத்தலை சமாளிக்க விசேட பொலிஸ் பிரிவுகளை ஸ்தாபிப்பதோடு நிலைநிறுத்துவது பற்றி ஐக்கிய நாடுகள் பரிசீலனை செய்ய வேண்டும்.

அத்தகைய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் அனுபவம் வாய்ந்த பொலிஸ் அதிகாரிகள் குற்றவியல் நீதித்துறை வல்லுநர்களுக்கு பங்களிக்க எமது நாடு தயாராக இருக்கிறது.

இதேபோன்று பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் பங்காளி நாடுகளுடன் தனது அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள இலங்கை தயாராக உள்ளது என்றார். (நி)

---

உ
சிவமயம்
ஓம் திக்கரை முருகன் துணை

# காரைநகர் களபூமி திக்கரை முருகன் திருப்பணி அன்புடன் செய்ய வாரீர்

**உருவாய் அருவாய் உளதாய் இலதாய்**
**மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்**
**கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்**
**குருவாய் வருவாய் அருள்வாய் குகனே**

ஈழவள நாட்டினைத் திருமூலநாயனார் "சிவ பூமி" என்றவர்.அப்படியான சிவபூமியின் வடபால் உள்ள களபூமி காரைநகர் வாழ் பெருங்குடி மக்களே, அடியனின் பணிவான வேண்டுகோள்! முன்னொரு காலத்தில் மதுரை மாநகரிலே மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்துத் துன்பப்படுத்தினான் பாண்டிய மன்னன். ஏன்? அற்ப பொருளாசையால் அடியவன் துன்பத்தைக் கண்டு ஆற்றாத இறைவன் வைகையைப் பெருகப் பண்ணி எல்லா உயிரும் துயருறுமாறு செய்தார். ஓர் சிவனடியாருக்குத் துன்பம் ஏற்பட்டால் எல்லோரும் துன்பப்பட நேரிடும். பாவம் பிட்டு விற்றுச் சீவனோபாயம் செய்யும், வந்திக்கிழவிக்கும் வந்தது துன்பம். ஆனால் அவர் வழிபாட்டினால் பேரின்பம் பெற்றார். எம்பெருமானையே கூலியாளாகப் பெற்றார்.

எம்பெருமானுக்கே பிட்டு அமுது அளித்து ஆனந்தம் பெற்றார். அவர் பங்கை அடைக்க சிவபெருமானே கூலியாளாக வந்து வைகைக்கரையை அடைத்தார். ஒரு தொழிலாளி அடிபட்டால் உலகமே அடிபடும் என்ற தத்துவத்தை உணர வைத்தார். உலகமெல்லாம் நிறைந்த அப்பெருமான் தான் முருகப்பெருமான் (திக்கரை முருகன்) ஆவார்.

இதனைக் கந்தபுராணக் காப்புச் செய்யுளில் காணலாம். **கந்தபுராணத்தை காதலித்து ஓதுவார்க்கு சிவகதி!** எனக் கச்சியப்பர் சிவாச்சாரியார் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சைவப்பெருமக்களே! கும்பாபிஷேகப் பெருவிழாவை முன்னிட்டு எம்பெருமான் திருத் தலத்தில் திருப்பணி நடைபெற்ற வண்ணம் உள்ளது. பொன்னாகவும், பொருளாகவும் வசதி படைத்தோர் வாரி வழங்குங்கள். ஏனையோர் தாங்கள் இயலுமான அளவுக்குக் கொடுங்கள். இயலாதவர் உடல் உழைப்பைத் தானம் செய்யுங்கள்.நீங்கள் கொடுப்பது உங்களையும் வாழ வைத்து உங்கள் சந்ததியையும் வாழ வைக்கும். நீங்கள் இரு கரத்தால் கொடுத்தால் பன்னிருகரத்தால் வாரி வழங்குவான். வள்ளியின் வள்ளல் முருகப் பெருமான் சேக்கிழார் பெருமான் அடியார்களைப்பற்றி திருத்தொண்ட புராணத்தில்.

**என்றும் இன்பம் பெருகு மியல்பினால்**
**ஒன்று காதலில்து துள்ளமும் ஓங்கிட**
**மன்றுனாரடி யாரவர் வான்புகழ்**
**நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்**

என்று வாழ்த்தித் தனது புராணத்தையே பூர்த்தி செய்கிறார். அப்படிப் பெரியவர்களாகிய **சீர் அடியவர்களாகிய நீங்களும் பெருஞ்சாந்தி வைபவம் கைகூட உங்கள் கரங்களை நீட்டுங்கள்.**

**வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட**
**தீரவேல் செவ்வேல் திருக்கைவேல்- வாலி**
**குறித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்**
**துளைத்தவேல் உண்டே துணை!**

கார்த்திகேயப்புலவர் இயற்றிய அருள்மிகு அந்தாதி ஏடுகள், இலண்டன் மாநகரில் சர்வதேசப் பொருட்காட்சியில், **திண்ணபுர அந்தாதியால் தன்னை யமக அந்தாதியால், திக்கரை அந்தாதியால் புகழ் அடைந்த ஆலயம் ஆகும்.**

தன்னையம்பதி பிள்ளையார் இவ் வருடம் கும்பாபிஷேகம் நிறைவாகியது, கணேசப் பெருமான் திருவருள் ஆகும். திக்கரை முருகன் திருப்பணிவேலைகள் நடைபெறுவது **அருள்மிகு திக்கரை முருகன் செயலாகும்.**


சிவ திண்ணபுரம் ஈழத்துச் சிதம்பரம் நடராயப் பெருமான், பூரண புட்கலை ஐயனார் புனருத்தானம் நடைபெற திண்ணபுர அந்தாதியும், திருவாசகமும், காரைநகர் சிவ அன்பர்கள் அனைவரும் ஓதியும், பாடியும் திண்ணபுரத் தில்லைக் கூத்தனையும் ஐயனாரையும் போற்றி வணங்கிப் பிரார்த்திப்போமாக "ஓம் நமசிவாய"

"இறைச்சிப்பற் றிரத்தத்திட் டிசைக்கொக்கப் பரப்பப்படடெலும்புக்கட் டளைச்சுற்றிச் சுவர்கோலி "
இப் புகழை ஓத 4 ஆவது வரியில்– திருப்புகழ்– 465
திருப்பத்மத் திறத்தைப் பற்றுகைக்குச் சித்திரத்தைச் சொற்றி
தக்கொற்றப் புகழ்ச்செய் திரிவேனோ!

பிறப்புக்களை அடைந்து,துன்பம் கனவு,மயக்கம், வேதனை அடைந்தும் திரியாமல் முருகா உனது அழகிய தாமரையாம் திருவடிகளின்,திறம் பற்றி உய்வதற்கு, அழகை வெளிப்படுத்தும் அன்புச் சொற்களால் உனது வீரப் புகழைச் சொல்லி திரிய மாட்டேனே! திக்கரை முருகா !கந்தா! கார்த்திகேயா!

**ஓவாதே எவ்வுருவில் யார் ஒருவர் உள்குவார்**
**உள்ளத்தில் அவ்வுருவாய்த் தோன்றி அருள் புரியும்**
**காரைநகர் களபூமி திக்கரை முருகா! கந்தா**
**கடம்பா, கார்த்திகா, எம்மையும் நன்நெறியில்**
**திருப்புகழ்,கந்தர் அநுபூதி, திருவாசகம் ஓதி**
**நின்பொற்பாதங்கள் பிடித்தோம் நற்கதி அருள்வாய்**

**க.கு.க சிவபாலன் K-K-K**
**அருள்மிகு ஆறுமுகம்**
**பெருமான்**
**ஆறாம் திருவிழா அன்பன்**
**அன்பே சிவம்**



(சி-707)

---

# இராசிபலன்

01.07.2024
ஆனி 17, திங்கட்கிழமை,
தசமி முற்பகல் 11.29 மணிவரை

அச்சுவினி முற்பகல் 7.49 மணிவரை
சுபநேரம் -11.56-1.26 மணிவரை
இராகுகாலம் -7.26-8.56 மணிவரை

சந்திராஷ்டமம்.
பூசம்.

வளவன்

**மேஷம்**
திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மிதுனம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்**
கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அகன்று வியாபார விருத்தி ஏற்படலாம், மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கன்னி**
கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பொது நலனில் ஈடுபடும் போது மற்றவர்களின் அதிருப்திக்கு ஆட்பட நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**துலாம்**
பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**
அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**தனுசு**
எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ்பெறுவீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரம்**
விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**கும்பம்**
தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உறவினர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மீனம்**
பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், பொது நலனில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.

உன்னைவிட [illegible] எடை போட்டுவிடாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறைசேரி உண்டியல் ஏலத்தில் மத்திய வங்கி விசேட அறிவித்தல்

(கொழும்பு)

திறைசேரி உண்டியல்களை ஏலத்தில் விடுவது தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசேட அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

இதன்படி நாளை மறுதினம் 3 ஆம் திகதி திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன.

91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் இதன் மூலம் ஏலத்தில் விடப்படவுள்ளன.

182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 90 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் மற்றும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 50,000 மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த ஆறு மாதங்களில் டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 7.3 விகிதத்தினால் அதிகரித்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.(க)

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் கைது

(கொழும்பு)

சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை அணிந்திருந்த பயணி ஒருவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்துப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவமானது, நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 47 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் 995 கிராம் நிறையுடைய 24 கரட் தங்க நகைகளை அணிந்திருந்த நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார். (க)

## நயினாதீவு வாள்வெட்டு; சூத்திரதாரி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நயினாதீவில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வாள்வெட்டு சம்பவத்தில் காயம் அடைந்தவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், வாள்வெட்டின் பிரதான சந்தேகநபர் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால், கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(க)

## தொலைபேசி இணைப்பு வயர்களை அறுக்கும் விசமிகள்

(கரணவாய்)

கரணவாய் மண்டான் பகுதியில் உள்ள நிலையான இணைப்பு தொலைபேசி வயர்களை விசமிகள் அறுத்துச் செல்வதாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக ஆள்நடமாட்டமற்ற நேரங்களைச் சாதகமாகப் பயன்படுத்தும் விசமிகள் தொடர்ச்சியாக குறித்த விசமத்தனத்தை மேற்கொள்வதனால் பொது மக்கள் பலர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

குறித்த விடயம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

குறித்த பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களும் நடைபெறும் நிலையில் உடன் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-60)

## பொதுப் போக்குவரத்து அத்தியாவசிய சேவையானது

### விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

பொது போக்குவரத்து சேவைகளை அத்தியாவசிய சேவையாக மாற்றும் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தமானியானது 1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில், பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்துக்காக வீதிகள், பாலங்கள், தொடருந்து வீதிகள் மற்றும் தொடருந்துகள் போன்றவற்றின் மூலம் போக்குவரத்துச் சேவைகளை இலகு படுத்துவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கும் உரிய வர்த்தமானி அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)


சிவமயம்

பஞ்சாபிகேசன்: வான் நோக்கி உயர்ந்த நாதம்



1992 ஆம் ஆண்டு வண்ணை வைத்தீஸ்வரர் கோவிலில் நடைபெற்ற கௌரவிப்பு விழாவில் ஐயாவிற்கு பதக்கம் வழங்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்ததை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

நாதஸ்வரச் சக்கரவர்த்தி பஞ்சாபிகேசன் ஐயாவின் நூற்றாண்டு விழா இனிதே நடைபெற வாழ்த்துகின்றேன்.

144/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

கனகசபை தர்மகுலசிங்கம்,
பழமுதிர்ச்சோலை,



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 33<br>1 இல் சூரி செவ்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Electical and Electronic Engineer, Engineer (Australia)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, Accountant, Bsc Graduate, Dance Teacher<br>தொ.இ: B/14602 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 24<br>12 இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: LLB. நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்<br>எதிர்பார்ப்பு:அரச வேலை.IT, Engineer, சட்டத்துறை, ஆசிரியர்<br>தொ.இ: G/14601 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 42<br>2 இல் செவ்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: Account Executive<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14603 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 32<br>2 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, உதவி விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/14605 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 21<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:Bsc(IT), DO<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி , அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14604 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BSC பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: சைவ போசனம், அரச/ தனியார் உத்தியோகம், மணமகன் அசைவ போசனமும் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/14607 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைக்கு தடைவிதிப்பு?

## ஆராயும் கல்வி அமைச்சு

(கொழும்பு)

மாணவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் குறித்த நிபுணர் குழு அறிக்கையை இலங்கையின் நீதி அமைச்சகம், கல்வி அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது.

2024 ஜுன் மாதத்திற்குள் சட்டங்களை உருவாக்கி வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஏப்ரலில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த நிலையில் தற்போதே இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த விடயத்தில் உள்வாங்கப்படுவதால் கல்வி அமைச்சின் கருத்துக்களைப் பெறுவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாக நீதி அமைச்சகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்மொழிவுகளில் மாணவர்களுக்கு ஆசிரியர்களால் வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனையை தடை செய்வதற்கான நடவடிக்கையும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த பரிந்துரை பாடசாலைகளில் ஒழுக்கத்தை வளர்ப்பதை கடினமாக்கும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு மே மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழுவினால் சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பாடசாலைகளில் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சிறுவர்களுக்கு உடல் ரீதியான தண்டனையை ஒழிப்பதற்கான சட்டம் இயற்றப்பட வேண்டியது கட்டாயமாகும் என்று ஆர்வலர்கள் தெரிவித்து வருகின்றனர். (நி)

### பாராளுமன்ற அமர்வுகளை புறக்கணிக்க திட்டமிடும் எதிர்க்கட்சி

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளை புறக்கணிக்கப்பதற்கு எதிர்க்கட்சி திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதம் நடத்தப்படும் அமர்வுகளை புறக்கணிக்கப் போவதாக எதிர்க்கட்சி பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு நிவாரணங்களை வழங்காத உடன்படிக்கை பற்றி பேசுவது நகைப்பிற்குரியது என பாராளுமன்றில் அறிவித்து விட்டு, அமர்வுகளை புறக்கணிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனை குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு இறுதித் தீர்மானம் எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவாதம் எதிர்வரும் 9ஆம் திகதி நடத்தப்படவிருந்தது.

எனினும், பாராளுமன்ற நிலையியற் கட்டளையை இடைநிறுத்தி விவாதம் நாளை மற்றும் நாளை மறுதினம் நடத்தப்பட உள்ளதாகவும் அதற்கும் எதிர்ப்பு வெளியிட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நிலையியற் கட்டளையின் 16ஆம் கட்டளைக்கு அமைவாக பிரதமரின் கோரிக்கைக்கு அமைய பாராளுமன்றம் கூட்டப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

### யானைக்குப் பயந்த சாரதி பேருந்தில் மோதிப் பலி



(கொழும்பு)

புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியின் முச்சக்கர வண்டியும் பேருந்தும் மோதியதில் முச்சக்கரவண்டியின் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் இடம்பெற்றுள்ளது.

அநுராதபுரத்தில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியின் சாரதி, வீதியைக் கடந்த காட்டு யானையைக் கண்டு பயந்து தனது வாகனத்தை சடுதியாக திருப்ப முற்பட்டபோது முச்சக்கரவண்டியானது பேருந்து மீது மோதியுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (க)

### கதிர்காமக் கந்தனின் காட்டுப் பாதை திறந்து வைப்பு

(மட்டக்களப்பு)

வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காமக் கந்தனின் ஆடிவேல் விழா உற்சவத்தை முன்னிட்டு கதிர்காமத்திற்கான குமுண தேசிய பூங்கா ஊடான காட்டுப்பாதை விசேடப் பூஜைகளுடன் நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் இந்தப் பாதை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் கலந்து கொண்டுள்ளார். (க)

### புதிய பதில் சட்டமா அதிபராக பாரிந்த ரணசிங்க

(கொழும்பு)

புதிய பதில் சட்டமா அதிபராக பாரிந்த ரணசிங்க இன்று பதவிப்பிரமாணம் செய்துகொள்ளவுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்கள மேலதிக சொலிசிட்டர் ஜெனரலாக அவர் தற்போது பணிபுரிகிறார்.

இவர் முன்னாள் பிரதம நீதியரசர் கே.ஏ.பி.ரணசிங்கவின் புதல்வராவார்.

சட்ட மா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்தின் சேவை நீடிப்புக்கு ஜனாதிபதி வழங்கிய பரிந்துரையை அரசியலமைப்பு பேரவை நிராகரித்திருந்த நிலையில், இந்த பதவிக்கு பாரிந்த ரணசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். (நி)


### கேள்வி அறிவித்தல்
### சபைநிதி வேலைத்திட்டம்-2024
### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு,வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்விக்கமைய நடாத்தப்படும். எனினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (III) ஆம் இலக்க 2021.02.18 ஆம் திகதிய மற்றும் 01/2024ஆம் இலக்க 01.03.2024 ஆம் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதுடன். வட மாகாணத்தை சார்ந்தவர்களுக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி IV இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் 021 225 6651) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணங்களின் தொகுதி ஒன்றைத் தலைவர். உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, யாழ் வீதி மானிப்பாய் எனும் முகவரியில் 01.07.2024ஆம் திகதியிலிருந்து 15.07.2024ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000.00 இனை (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு ஆவணங்களில் தயாரித்து மூலஆவணம், நகல்ஆவணம் என தனித்தனி உறைகளிட்டு, தலைவர்,உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 16.07.2024ஆம் திகதி காலை 10.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவே அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணைகளில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் செலுத்தி அதன் உண்மைப்பிரதியினை கேள்வி ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.07.09ஆம் திகதி வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் தலைமை அலுவலகத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளமுடியும்.
10. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை தகுந்த காரணங்களுடன் நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

| தொ. இல | வேலை விபரம் மற்றும் கேள்வி இல | மதிப்பீட்டு தொகை மில்லியன் (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கேள்வி செல்லுபடியாகும் காலம் | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | மானிப்பாய் சந்தை அபிவிருத்திவேலை NP/14/41(16)/W/CF/2024/16 | 2.04 | 63 நாட்கள் | C8 and C7 (கட்டடம்) | 63 நாட்கள் | 20,350.00 | 14.10.2024 |
| 02 | மானிப்பாய் கிராம உபஅலுவலகத் திருத்தம், ஆனைக்கோட்டை NP/14/41(16)/W/CF/2024/17 | 1.60 | 63 நாட்கள் | C9 and C8 (கட்டடம்) | 49 நாட்கள் | 16,000.00 | 30.09.2024 |
| 03 | மகா சனசமூகநிலைய கிளை வீதி புனரமைப்பு மானிப்பாய் மேற்கு NP/14/41(16)/W/CF/2024/18 | 1.03 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 10,400.00 | 30.09.2024 |
| 04 | i) கலையரங்கம் வீதி புனரமைப்பு சில்லாலை வடக்கு ii)ஞானவைரவர் கோவில் வீதி புனரமைப்பு, சில்லாலை வடக்கு NP/14/41(16)/W/CF/2024/19 | 1.47 | 63 நாட்கள் | C9 and C8 (வீதி) | 49 நாட்கள் | 14,700.00 | 30.09.2024 |

**தலைவர், உள்ளூராட்சி அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**
**01.07.2024**

(சி-708)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவின் இரு இடங்களில் வெடி விபத்து:8 பேர் பலி

(புதுடில்லி)

விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே பந்துவார் பட்டியில் கடந்த வெள்ளிக் கிழமை காலை பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 3 தொழிலாளர் கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

மேலும், வெடி விபத்தில் 3 அறைகள் சேதமாகியுள் ளதாகவும், சிலர் உள்ளே சிக்கியுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இதேவேளை, தெலுங் கானா மாநிலம் ரங்காரெட்டி மாவட்டம், ஷாத்நகரில் உள்ள கண்ணாடி தொழிற் சாலையில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதோடு,15 தொழிலாளர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

வெடி விபத்தின் தாக் கத்தால் பல தொழிலாளர் கள் உடற்பாகங்களை இழந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்ற னர் என இந்திய செய்திகள் தெரிவித்துள்ளன. (நி)

## நேபாளத்தில் நிலச்சரிவு 9 பேர் உயிரிழப்பு



(நேபாளம்)

நேபாளத்தில் பருவப் பெயர்ச்சி காரணமாக பெய்து வரும் கனமழை காரணமாக பாரிய சேதங்கள் ஏற்பட்டுள் ளன.

நிலச்சரிவு , மின்னல் தாக் கம் என மக்கள் பல இயற்கை இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், கனமழை மற்றும் நிலச்சரிவுகளில் சிக்கி 3 குழந்தைகள் உட்பட 9 பேர் பலியாகி உள்ளனர் என தக வல் வெளியாகியுள்ளது. மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் நிலச்சரிவில் பலியானது அப் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கனமழையால் ஏற்படும் நிலச்சரிவுகளால் பொது மக்க ளின் இயல்பு வாழ்க்கை மற் றும் சுற்றுச்சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகிறது.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் பல லட்சம் பேர் பருவகாலத் தின்போது ஏற்படும் மழை தொடர்பான சம்பவங்களால் பாதிக்கப்படுகின்றனர் என தேசிய இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித் துள்ளது. (நி)

## நைஜீரியாவில் 3 இடங்களில் குண்டுவெடிப்பு -18 பேர் உயிரிழப்பு


(நைஜர்)

நைஜீரியாவின் போர்னோ மாநிலத்திலுள்ள குவோசா நகரில், நேற்று முன்தினம் அடுத்தடுத்து 3 இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப் பில் குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

திருமண நிகழ்ச்சி, மருத்துவமனை மற்றும் இறுதிச்சடங்கு என மூன்று இடங்களிலேயே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள் ளது.

இதேவேளை இக் குண்டு வெடிப்பில் சிக்கி 48 பேர் படுகாயமடைந்துள்ள னர் எனவும், அவர்களில் பலரது நிலை கவலைக் கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக் கக்கூடும் எனவும் அஞ்சப் படுகின்றது.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இது குறித்த தீவிர விசா ரணைகள் முன்னெடுக்கப் பட்டு வருவதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (நி)



## நேட்டோ மாநாடு- 2024
### இஸ்ரேல் உயர் அதிகாரிக்கு அழைப்பு

(வோஷிங்டன்)

நேட்டோ அமைப்பின் 75 ஆவது மாநாடு அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அமெரிக்கா இஸ்ரேல் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் கட்ஸ்க்கு அழைப்பு விடுத் துள்ளதாக சர்வதேச ஊடக ங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

குறித்த மாநாடானது அடுத்த மாதம் 9 ஆம் திகதி யிலிருந்து 11 ஆம் திகதி வரை அமெரிக்காவின் வோஷிங் டன் நகரில் நடைபெறவுள்ளது.

இதில் அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடன் கலந்து கொள்வதோடு, இஸ்ரேலைத் தொடர்ந்து பல அரபு நாடுக ளுக்கும் அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் உட்பட 32 நாடுகள் நேட்டோ அமைப் பில் இணைந்துள்ளன.

இந்நிலையில் உக்ரைன் நேட்டோவில் இணைய விரும்பியதால் ரஷ்யா அந்த நாடு மீது படையெடுத் துள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சூடானில் கடும் பஞ்சம்
## இலை,மண்ணை உட்கொள்ளும் மக்கள்

(கார்டும்)

ஒரு வருடத்திற்கும் மேலாக உள் நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் சூடான் மக்களில் பாதி பேர் கடும் பஞ்சத்தை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியுள்ளது.

சில சூடானியர்கள் ஏற்கனவே தங்கள் பசியைத் தணிக்க இலைகளையும் மண்ணையும் சாப்பிடுவதாகக் கூறப்படு கிறது. உலகின் மிக மோசமான பஞ்சம் என்று அறிவிக்கப்பட்டுள்ள சூடானிய உணவு நெருக்கடி, நாட்டில் இதுவரை பதிவு செய்யப்படாத மிக மோசமான உணவுப் பாதுகாப்பின்மை என்று கருதப் படுகிறது. (நி)



# இரண்
# ஈரானி

(டெஹ்ற்ரான்)—
ஈரானில் ஜன
பெற்று நிறைவ
எந்தவொரு வே
மையை பெறா
தேர்தல் இரண்ட
என அறிவிக்கப்

இஸ்லாமியக் குடியரசு மேற்காசியாவில் அமையப் பெற்றுள்ள ஈரான் நாட்டில் கடந்த 26 ஆம் திகதி ஜனா திபதித் தேர்தல் நடைபெற் றது.

இந்தத் தேர்தலில் இறுதி வேட்பாளர்களாக பட்டியலிடப் பட்ட, முகமது பாகர் கலிபாப், சயீத் ஜலிலி, மசூத் பெஜெஷ்

கியான்
போர்முக
போட்டியி
இதன
எண்ணு
வடைந்த
அறிவிக்
மசூத் பெ
கோடி வா
டன் சயீத்

## அமெரிக்க அதிபர்
### களமிறங்குகிறார் மிட்செ

(வோஷிங்டன்)



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிடவுள்ள ஜனாதிபதி பைடனுக்கு பதி லாக முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிட்செலை களமிறக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளதாக தக வல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய ஜனாதிபதி பைடனின் வயது மூப்பு மற் றும் அவரின் தளர்வு கார ணமாக இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கும் ஜனாதிபதி பைடனுக்கும் இடையே நடைபெற்ற விவாதத்தில் கூட, பைடன் தடுமாற்றத்து டன் காணப்பட்டதாக செய் திகள் தெரிவிக்கின்றன.

ஜோ பைடனின் இந்த தடுமாற்றம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய

நிலையில்
ஜனாதிபதி
ஒபாமாவி
செல் ஒபா
வாய்ப்புள்
வேகமாக
இந்நி
நாயகக் க
திபதி வேட்
ஒபாமா
என்று குடி
வழக்கறி
தெரிவித்து
ஏற்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பெரும்பான்மை இல்லாததால்

# ண்டாவது முறையாக

# னில் ஜனாதிபதித் தேர்தல்

ன்)

**ஜனாதிபதித் தேர்தல் நடை**
**நிறைவடைந்துள்ள நிலையில்**
**ரு வேட்பாளரும் பெரும்பான்**
**பெறாதமையால் ஜனாதிபதித்**
**ரண்டாம் கட்டத்திற்கு செல்லும்**
**க்கப்பட்டுள்ளது.**



கியான் மற்றும் முஸ்தபா போர்முகமதி ஆகியோர் போட்டியிட்டனர்.

இதனையடுத்து வாக்கு எண்ணும் பணிகள் நிறைவடைந்ததன் பின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் மசூத் பெஜெஷ்கியான் 1.4 கோடி வாக்குகளைப் பெற்றதுடன் சயீத் ஜலிலி 90.4 லட்சம் வாக்குகளைப் பெற்றுள்ளார்.

முகமது பாகர் கலிபாப் 30.3 லட்சம் வாக்குகளையும், முஸ்தபா போர்முகமதி 2.06 வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

எனினும், இந்தத் தேர்தல் முடிவுகளுக்கமைய மசூத் பெஜெஷ்கியான் அதிகபட்ச வாக்குகளை பெற்றிருந்தாலும், ஈரான் அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற வேண்டுமாயின் 50 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற வேண்டியது கட்டாயமாகும்.

ஆனால் அவ்வாறு பெறாவிட்டால் முதல் இரண்டு இடங்களில் உள்ள வேட்பாளர்களுக்கு இடையே இரண்டாம் கட்ட தேர்தல் நடத்தப்படும் எனவும் அதற்கமைய, தற்போது அதிகபட்ச வாக்குகளைப் பெற்று முதல் இரண்டு இடங்களைப் பெற்றுக்கொண்ட வேட்பாளர்கள் மசூத் பெசெஸ்கியன் மற்றும் சயீது ஜலிலி ஆகிய இருவருக்கும் இடையே அடுத்த வாரம் இரண்டாம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

ஈரான் வரலாற்றில் இதற்கு முன்னர் கடந்த 2005 ஆம் ஆண்டில் மாத்திரமே இரண்டாம் கட்டத் தேர்தல் நடத்தப்பட்டிருந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## திபர் தேர்தல்
### மிட்செல் ஒபாமா



நிலையில் பைடனுக்கு பதில் ஜனாதிபதி வேட்பாளராக ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா போட்டியிட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வேகமாக பரவி வருகின்றன.

இந்நிலையில், ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக மிச்செல் ஒபாமா போட்டியிடுவார் என்று குடியரசுக் கட்சியின் வழக்கறிஞர் டெட் க்ரூஸ் தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# தென்கொரிய உதிரிப் பாகங்களுடனான காரை வடகொரிய ஜனாதிபதிக்கு பரிசளித்தார் புடின்

## வெடித்தது சர்ச்சை

(பியாங்யாங்)


ரஷ்யாவுக்கும் வட கொரியாவுக்கும் இடையிலான உறவு நாளுக்குநாள் வலுவடைந்துகொண்டே வருகிறது. மேற்கு நாடுகளுக்கு பரம எதிரிகளாக விளங்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தங்களது நாடுகளுக்கிடையில் பரஸ்பர உறவை நிலைநாட்ட முயற்சித்து வருகின்றனர்.

உக்ரைன் போரில் ரஷ்யாவுக்கு ஆதரவாக ஆயுதங்களை அனுப்பும் அளவுக்கு இந்தப் புதிய உறவு வலுப்பெற்றுள்ளது. 24 ஆண்டுகள் கழித்து கடந்த ஜூன் 19 ஆம் திகதி இரண்டாவது முறையாக ரஷ்ய ஜனாதிபதி புடின் வட கொரியாவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டார்.

வட கொரிய தலைநகர் பியங்யாங்கில் கிம் ஜாங் உன் ஐ சந்தித்து அவருக்கு ரஷ்ய தயாரிப்பான அவுரஸ் லிமவுசைன் என்ற சொகுசு காரை பரிசளித்தார் புடின்.

மேலும் இருவரும் அந்த காரில் சிறிது தூரம் பயணம் மேற்கொண்டனர். கிம் ஜாங் உன் அருகில் அமர்ந்திருக்க புடின் சொகுசு காரை ஓட்டிக் காட்டினார். பின்னர் கிம் ஜாங் உன் காரை ஆர்வமாக ஓட்டிப்பார்த்தர். இந்த வீடியோ இணையத்தளத்தில் தீயாகப் பரவி வருகிறது.

இந்நிலையில் புடின் பரிசளித்த அவுரஸ் லிமவுசைன் கார் குறித்த சர்ச்சைக்குரிய





உண்மை ஒன்று தற்போது வெளியாகியுள்ளது. அதாவது, அவுரஸ் லிமவுசைன் கார்களை அவுரஸ்மோட்டார்ஸ் என்ற ரஷ்ய நிறுவனம் தயாரித்து வரும் நிலையில் கார் தயாரிப்பிற்கான உதிரிப்பாகங்களை அந்நிறுவனம் தென் கொரியா, சீனா, இந்தியா, துருக்கி, இத்தாலி என பல்வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதாக ரியூட்டர்ஸ் நிறுவனம் கண்டறிந்துள்ளது.

வடகொரியாவும் தென் கொரியாவும் பரம எதிரிகளாக இருந்து வருவது அனைவரும் அறிந்ததே. அப்படி இருக்க வட கொரிய ஜனாதிபதிக்கு தென் காரிய உதிரிப் பாகங்களைக் கொண்ட காரை புடின் பரிசளித்திருப்பது சர்ச்சையை கிளப்பியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மரமுந்திரிகை/கொல்லாம்பழம்

**Botanical Name - Anacardium occidentale**
**Family - Anacardiaceae**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நடுத்தர மர இனத்தைச் சேர்ந்தது. தனியிலை, ஒன்று விட்ட இலையமைப்பைக் கொண்டது. கோள வடிவ இலைகள். பூக்கும் காலம் கார்த்திகை, தை, பங்குனி ஆகும். போலிக்கனி, உண்மை கனிகளைக் கொண்டது. விதையை சுற்றியிருக்கும் கனியுறையினை நீக்கி பயன்படுத்த வேண்டும். கோடை காலத்தில் அதிகம் இதன் பழங்களை பெற்றுக் கொள்ளலாம். இப் பழத்தில் உயிர்ச்சத்து B1, B2, B3, நார்ச்சத்து, இரும்புச்சத்து, பொட்டாசியம், பொஸ்பரஸ், காபோவைதரேற்று, புரதம், நீர்ச் சத்து, கரோட்டினொயிட்டுக்கள் காணப்படும்.

உடலின் நீர்ப்பீடத்தை அதிகரிக்கச் செய்யும். தேசிப் பழத்தை விட 5 மடங்கு அதிகமாக Vit-C காணப்படும். அத்துடன் புற்றுநோய்க் கலங்கள் வளர விடாமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது.


இப் பழத்தில் காணப்படும் பொட்டாசியம் சத்தானது இருதயத்தை பாதுகாப்பாக வைத்திருப்பதுடன் உயர் குருதி அமுக்கத்தை சீராக வைத்திருக்கக் கூடியது. தனியாக சாப்பிடும் போது தொண்டையில் ஒரு வித கரகரப்பை ஏற்படுத்தும்.

பங்குனி, சித்திரை, மாதங்களில் கிடைக்கக் கூடியது. கரகரப்பை நீக்குவதற்கு கொல்லான் பழத்தை நான்கு துண்டுகளாக வெட்டி உப்புத் தண்ணீரில் ஊறவைத்து பின்பு கழுவி சாப்பிட வேண்டும். முந்திரிப் பருப்பை விட பழத்தில் அதிகமான மருத்துவப் பண்புகள் உண்டு. மரமுந்திரிப் பழத்தில் Tannin சத்தும் உண்டு.

இது சாப்பிடும் போது தொண்டையில் கரகரப்பை ஏற்படுத்தின் நீராவியில் வேகவைத்து பயன்படுத்தலாம். உயிர்ச்சத்து C குறைபாடு உடையவர்கள் இப் பழத்தை தாராளமாக பயன்படுத்தலாம். இப் பழத்திலிருந்து யூஸ், ஜாம் தயாரித்து பயன்படுத்தி வர நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இப் பழத்தில் நார்ச்சத்து அதிகமாக இருக்கும். பழத்தை சாப்பிடும் போது இதை உணரலாம். இது மலக்கட்டை நீக்கக் கூடியது. இதில் சுண்ணாம்புச் சத்து அதிகமாகக் காணப்படும். இது பற்களுக்கும் என்புகளுக்கும் சிறந்தது. என்பு சம்பந்தமான நோய்களுக்குச் சிறந்தது.

கோடை காலத்தில் பொதுவாக இப் பழங்கள் தாராளமாகக் கிடைக்கும். தாராளமாக கிடைக்கக் கூடிய காலங்களில் இப் பழங்களை சேகரித்து ஒரு பெரிய பாத்திரத்தில் நீர் விட்டு கொதிக்க வைத்து அதில் இப் பழங்களைப் போட்டு நன்றாகப் பிசைந்து சக்கையை வீசிய பின் அப்படியே அடைய விட்டால் அடியில் நிறைய சுண்ணாம்புச் சத்து படிந்திருக்கும்.

பழத்தில் செம்புச் சத்து அதிகம் உண்டு. செம்புச் சத்து இரும்பு அறுசேபத்தை சீராக்கி சிவப்பு இரத்த அணுக்களை சீராகப் பேணும். Anacardicacid எனும் வேதியற் பொருளும் இப் பழத்தில் உண்டு. இப் வேதியற் பொருளானது புற்று நோய்க் கலன்கள் மேலும் பரவாமால் தடுக்கக் கூடியது.



எனவே புற்று நோய் பாதிப்பு உடையவர்கள் மரமுந்திரிகைப் பழத்தைச் சாப்பிடலாம். இரத்தசோகை நோய் வராமல் தடுக்கக் கூடியதுமாகும்.

பழத்தில் துத்த நார்ச்சத்தும் அதிகம் உண்டு. இதனாலும் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் ஆற்றல் இப் பழங்களுக்க உண்டு. இப் பழங்களில் Pro - anthocyanine எனும் வேதியற் பொருளும் புற்றுநோய் கலங்களை வர விடாமல் தடுக்கும் ஆற்றல் உண்டு.

மக்னீசியம் சத்தும் இப் பழத்தில் அதிகம் உண்டு. இது தசைப்பிடிப்புக்கள் வராமல் தடுக்கக் கூடியது. நரம்புத் தளர்ச்சி வராமலும் நரம்புகளைப் பாதுகாக்கக் கூடிய தன்மையும் உண்டு. இப் பழங்களைத் தொடர்ச்சியாகப் பாவித்து வர சரும சுருக்கங்கள் வராமல் தடுத்து இளமைத்தோற்றத்தைக் கொடுக்கக் கூடியது.

இப் பழத்தில் காணப்படும் போலிக் அமிலம் மற்றும் மொனோ நிரம்பாத கொழுப்பமிலம் காணப்படுவதால் மாரடைப்பு வராமல் தடுப்பதோடு இருதயத்திற்குப் போகக் கூடிய இரத்த ஓட்டத்தை சீராக்கி இருதயத்தை பலப்படுத்தக் கூடியதுமாகும்.

இரத்தத்தில் காணப்படும் கொலஸ்ரோலின் அளவையும் சீராகப் பேணக்கூடியதாகவும் இருக்கும். இப் பழங்கள் கிடைக்கும் காலங்களில் தொடர்ச்சியாக சாப்பிட்டு வர பித்தப்பையில் உருவாகும் கற்களைக் கரைக்கக்கூடிய தன்மையும் உண்டு.இப் பழத்தில் கலோரி அளவும் குறைவாகக் காணப்படும்.

உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களும் இப் பழத்தைச் சாப்பிடலாம். அத்துடன் இப் பழங்கள் அஜீரணத்தைச் சீராக்கக் கூடியதாகவும் இருக்கும். இதன் பழங்கள் இனிப்புச் சுவையும் தட்ப வீரியமும் இனிப்பு விபாகமும் கொண்டது. சிறு நீரையும் தாராளமாகக் கழியச் செய்யும்.

கோடைக காலங்களில் இப் பழங்கள் கிடைக்கும் போது நன்றாகக் கழுவி நான்காகக் கீறி வெட்டி மிக்ஸியில் போட்டு தேவையான அளவு பனை வெல்லம் சேர்த்து சிறிது உப்பும் சேர்த்து நீர் சேர்த்து அடித்து வடித்து யூஸாக அருந்தி வர உடலில் அதிகரித்த வெப்பத்தையும் தணித்து மேற்கூறிய மருத்துவ நன்மைகள் அனைத்தையும் பெற்றுக் கொள்ளலாம்.

# இன்று ஒரு தகவல் 169



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## பேசும் கணிப்பொறிகள்

ஒரு குடுப்பத் தலைவர் வந்தார். ரொம்ப சோகமாக இருந்தார். எனக்கு குடும்பத் தலைவர் என்ற பேர் தானோ தவிர நான் கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்பதற்கு எங்கள் வீட்டிலே யாருமே தயாராக இல்லை என்று சொல்லி மிகவும் வருத்தப்பட்டார். அவருக்கு அவ ருடைய வீட்டிலே எவ்வளவு மரியாதை என்பதைப் புரிந்து கொண்டேன்.

வீட்டுக்கு வீடு வாசல்படி என்பது அவருக்குத் தெரியவில்லை. அதனாலே தான் அதிகமாக கவலைப் படுகின்றார். அவரை உட்கார வைத்து ஆறுதல் சொன்னேன். இப்போது என்ன வேண் டும் உங்க ளுக்கு? கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்க வேண் டும். நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்டு நடந்து கொள்ள வேண்டும் அவ்வளவு தானே என்றேன். ஆமாம் என்றார். கொஞ் சம் பொறுங்கள் அது மாதிரி ஒரு கணனி வரப்போகின்றது. அதன் பின்பு நீங்கள் தான் ராஜா. உங்கள் வார்த்தைக்கு அதன் பின்பு ஒரு தனி மரியாதை கிடைக்கப் போகின்றது பாருங்களேன் என்றேன். நிஜமாகவா என்று ரொம்ப ஆர்வமாக! ஆமாம் என்று சொல்லி விட்டு அது பற்றிய விவரங்களை அவருக்குச் சொன் னேன். நீங்களும் தான் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள். உங்களி லேயும் பல பேருக்கு இது ஒரு ஆறுதலான செய்தியாக இருக்கும்.

அமெரிக்காவிலே வட கரோலினாவிலே டியூக் பல்கலைக் கழகம் இருக்கின்றது. அங்கே உள்ள ஆராய்ச்சியாளர்கள் சில பேர் சேர்ந்து இப்படி ஒரு கணனியை தயார் செய்திருக்கின்றர்கள். குரல் மூலமா கவும் தொடுகை மூலமாகவும் இனம் கண்டுகொண்டு அதற்கு ஏற்ற மாதிரி இயக்கக் கூடிய கணனி முறை ஒன்றை அவர்கள் கண்டு பிடித்துள்ளார்கள். அதன் பின் சில அறிவு பூர்வமான கணனி முறை களையும் உருவாகிக்கியுள்ளார்கள். அதிலே முக்கியமானது இந்தக் குரல் தொடர்பு முறை Voice Interactive System இதை சுருக்கமாக VIPS முறை என்று சொல்லுவார்கள்.

இதிலே அப்படி என்றால் சுமார் 80 கட்டளைச் சொற்களை அடங்கிய அட்டவணை ஒன்று தயார் செய்திருக்கின்றார்கள். அந்த அட்ட வணையை கணனிக்கு அறிமுகப்ப டுத்தியிருந்தார்கள். அந்த வார்த் தைகளைப் பயன்படுத்தி நீங்கள் உத்தரவு போட லாம். உங்கள் உத்தரவைக் கேட்டு அதன்படி நடக்கிறது. அந்தக் கணனியில் நீங்கள் எப்படி உத்தரவு போட வேண்டும் என்றால் அதற்கு ஒரு முறை இருக்கின்றது. உங்கள் ஒவ்வொரு கட்டளை யையும் இப்பொழுது என்கின்ற வார்த்தையோடு ஆரம் பிக்க வேண்டும் முடிந்தது என்கின்ற வார்த்தையோடு முடிக்க வேண்டும். அதாவது ஆங்கிலத்திலே Now என்று ஆரம்பித்து Over என்று முடிக்க வேண்டும்.

இந்த இரண்டு வார்த்தைக்கு நடுவிலே உங்கள் கட்டளையை இட்டு நிரப்பலாம். அது சரி நாம் சொல்வதை அது எப்படி கேட்கின் றது. அதற்கு காது இருக்கின்றதா? என்று கேட்காதீர்கள். அதிலே ஒரு மைக்ரோபோன் இருக்கின்றது அதிலே நீங்கள் பேச வேண் டும். உங்கள் உத்தரவைக் கேட்டதும் லிப்ஸ் கணனி இரண்டு கட்டமாக செயற்படுகின்றது. அதாவது குரலைப் புரிந்து கொள்வது ஒன்று. மொழியை புரிந்து கொள்வது இன்னொன்று அந்தக் கணனியிலே Recogniser ஒன்று இருக்கு அடையாளம் அறியும் சாதனம். நிங்கள் பேசுகின்ற வார்த்தைகளை கணனி நினைவுகளிலே ஏற்கனவே பதிவு செய்து வைத்திருக்கின்ற வார்த்தைகளோடு இது ஒப்பிட்டு பார்த்து அதற்கு பின் கணனி புரிந்து கொள் கின்ற சமிஞைகளாக மொழி பெயர்க்கின்றது. அதன் பின்பு உங்கள் உத்தரவு உடனே நிறைவேறு கின்றது. இதனைக் கேட்டவு டனே நம்ம குடுப்பத் தலைவருக்கு ரொம்ப திருப்தி. சீக்கிரம் வரட்டும் அந்தக் கணனி என்றார்.

நாங்கள் பேசிக் கொண்டிருப்பதை எல்லாம் கேட்டு விட்டு இன்னொரு அம்மா வந்தார்கள். அவர் ஒரு குடும்பத் தலைவி. எங்கள் வீட்டிலே இந்த பிரச்சினையே இல்லை. அவர் கூப்பிட்ட குரலுக்கு நான் உடனே ஏன் என்று கேட்கின்றேன். அவர் என்ன சொன்னாலும் ஏன்? எதுக்கு? என்று கேட்க மாட்டேன் உடனே செய்து விடுவேன் அது எப்படி முடிகிறது உங்களாலே என்று கேட்டேன் அவரிடம் பேசி அவஸ்தைப் படுவதை விட பேசாமலே செய்து முடிப்பது மேல் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையால் நெஞ்சங்களை வசமாக்கியவர் நாதஸ்வர மேதை பஞ்சாபிகேசன்

1970 களின் தொடக்க காலம்! சாவகச்சேரி இந்துவின் பத்தாந்தர மாணவன் நான். என்னுடன் விக்கினேஸ்வரன் என்ற ஒருவரும் கற்றுக்கொண்டிருந்தார்! நன்றாகப் பாடுவார் மேசையில் நான் மேளம் அடிப்பேன் ஏனைய பின்வரிசை மாணவர்கள் உடனிருந்து ரசிப்பர்! பாடும் விக்கியை யாரென்று விசாரித்தேன் 'பஞ்சாபி கேசன்' மகனென்று கூறினார். அப்போதே என்போன்றோர்க்கு அவரைத் தெரிந்திருந்தது!

கோயில்களின் சிறப்புத் திருவிழாக்களில்பஞ்சாபி கேசனின் பெரியமேளம் வந்திருக்கும். மகிழும்படி வாசிக்கும்! சின்ராசா, கணேசன், புண்ணியமூர்த்தி, கைதடி சின்னப்பழநி போன்ற தவில் விற்பனர்களும் அளவெட்டிப் பத்மநாதன்,கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி, பாலகிஷ்ணன் போன்ற 'நாயன'க்காரரும் விழாவை அலங்கரிப்பர்!

அதிலும் பஞ்சாபிகேசனின் நாதஸ்வரத்திலும் தம்பியார் நடராஜசுந்தரத்தின் தவலிலும் தென் மராட்சி மக்களுக்கு அலாதிப் பிரியம்! ஏன் உலக தவில் மேதை தட்சணாமூர்த்தி வந்தால், வாசித்து மகிழ்விப்பது இவர்களுடன் மட்டும் தானே? இவர்கள், அமைதியானவர், பண்பாளர், மேடைக் கவர்ச்சியானவர், சிறந்த விற்பன்னர், எங்கள் ஊரவர் என்ற பலதுமாய் இவர்மேல் விருப்பம் இங்குளோர்க்கு அதிகம்!

இவைதவிர, பஞ்சாபி ஐயாவின் குடுமி அவரை மற்றவரிலிருந்து பிரித்துக்காட்டும்! அவர் நாதஸ்வரத்திலிருந்து எழுமோசை காதுக்குள் தேன் நிறைக்கும்! 'நகுமோ' போன்ற உருப்படிகள்,'அலைபாயுதே' போன்ற கீர்த்தனைகள் காற்றில் கலந்து காதைத் தழுவும்!'கற்பக வல்லிநின் பொற்பதங்கள் பிடித்தேன்' வீரமணி ஐயரின் ராகமாளிகா இவரின் ஊதலில் கண்சிமிட்டி அழைக்கும்! வசந்த மாளிகையின் "மயக்கமென்ன"பாடல் காற்றில் கலக்க, வசந்த மிட்டுக்கொள்ளும் காதல் மனங்கள்!

ஊட்டிவரை உறவின் "பூமாலையில் ஓர் மல்லிகை" வாட்டியெடுக்கும் வாலிப மனங்களை! ஆண்டவன் கட்டளை "அமைதியான நதியினிலே ஓடம்" சீண்டாமல் சிதறாமல் காதலை வளர்க்கும்! மன்னாதி மன்னனின் "கண்கள் இரண்டும் இனி உம்மைக்கண்டு பேசுமோ" காதல் பிரிவினரில் கண்ணீரை வரவழைக்கும்!

நெஞ்சிருக்கும் வரை "எங்கே நீயோ நானுமங்கே உன்னோடு"விரகம் விளிம்பை மீறி வடியும்! அபூர்வ ராகங்கள் "ஏழு சுரங்களுக்குள் எத்தனை ராகம்", அம்பிகாபதி "சிந்தனைசெய்மனவே"ஆகிய பாடல்கள் சங்கீத சுரங்களை சாதனை ஆக்கும்! பாரதியாரின் "சின்னஞ் சிறுகிளியே கண்ணம்மா" குழந்தை வருடலைக் குழைத்துக் கொஞ்சும்! இவைதவிர,

தில்லானா மோகனாம்பாள் ஆங்கில இசைசுரம், ஆராதனாவின்(ஹிந்தி) "மேரே சப்பு நேமி ராணி கப்பு", செம்மீன் படத்தின்(மலையாளம்) "கடலினக் கரை போவோரே" ஆகிய பாடல்கள் இசைக்கு மொழியெதற்கு என்பதை உணர்விலேற்றும்!

பின்நாளில், உடல்நிலை தளர்வடைந்தும் மன நிலைக் கட்டுப்பாடுகள் குறைந்தும் காணப்பட்ட நாளொன்றில்,நானும் மூத்த மகன்-இன்றைய இசைக் கலாநிதி- நாகேந்திரமும் வீட்டில் இருக்கிறோம்! சிகிச்சைக்காகவும் வேறு சில வசதிகளுக்காகவும் பஞ்சாபி ஐயாவைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஐயாவை வெளிக்கிடுத்தியாச்சு. 'காரும்' ஆயத்தமாக நிற்கிறது! வாகனத்தைத் தட்டி நின்று ஐயா நவின்றது இது! "எட்டு மணிக்குக் கச்சேரி! இன்னுமேன் மினைக்கெடுறியள்?" இன்றும் காதில் கேட்கும் வார்த்தைகளிவை!

தளர்ந்திருந்த காலத்திலும் தளராத இசை நினைவு! இப்படி வாழ்த்த இசை மேதையையும் தொண்ணூற்றோராம் வயதில் -26.06.2015 இல் -



உலகறிந்த நாதஸ்வரவித்துவான் பஞ்சாபி கேசன் அவர்களின் 100 ஆவது ஜனனதினம் இன்றாகும்.இதனையொட்டி இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

இயற்கை தனதாக்கிக் கொள்கிறது!

இசையாய் வாழ்ந்தவரின் இனிய புதல்வரும் பேரர்கள் பலரும் இசைவழியில் நடக்கிறார். மகிழ்கிறோம்! நாகேந்திர அண்ணர் மகன் நிருபன் கனடாவிலும் விக்கியின் புத்திரர் சித்தார்த்தன் பிரதித்தன் இசை இணைஞராய்த் தென்மராட்சி மண்ணிலும் ஐயாவின் நினைவுகளை ஆழப் பதிக்கின்றார்! ஆக,01.07.2024 திங்கட்கிழமை ஐயாவின் 100 ஆவது அகவை நாளினை விழா வாக்கி மகிழ்கிறது தென்மராட்சி! வாழ்க பஞ்சாபிகேசன் நாமம்! வளர்க இசைச் சந்ததியார்!!!


**ச.மார்க்கண்டு.**
**(ஓய்வுநிலை ஆசிரியர்)**

# பொதுவேட்பாளராக சரியான ஒருவரை தெரிவு செய்தால் ஆதரவு வழங்குவோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம்

**(கிளிநொச்சி)**

**பொது வேட்பாளராக சரியான ஒருவரை நியமித் தால் தாம் பூரண ஆதரவு வழங்குவதாக வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க தலைவி யோ.கனகரஞ்சி தெரிவித்தார்.**




கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நேற்றுக் காலை 10 மணி முதல் அரை மணித்தியாலங்கள் வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நீதி வேண்டும் என்ற கோசங்களை எழுப்பியவாறு தமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் படங்க ளையும் தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.(நி)

# இலங்கை மீனவர்களை மீட்டுள்ள சிங்கப்பூர் கப்பல்

(கொழும்பு)

கடலில் மிதந்த போத்தலில் இருந்து திரவத்தை அருந்திய நிலையில், சுகவீனமடைந்த டெவோன் 5 படகின் மீனவர்கள் இருவர் வணிகக் கப்பல் மூலம் மீட்கப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

அந்த படகில் இருந்த 6 மீனவர்களில் 4 பேர் திரவத்தை குடித்த நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் சிங்கப்பூர்க் கொடியுடன் பயணித்த வர்த்தகக் கப்பலினால் மீட்கப்பட்ட ஏனைய இரண்டு மீனவர்களும், தற்போது டெவோன் 5 நெடு நாள் மீன்பிடி படகு இருக்கும் இடத்தை நோக்கி செல்லும் இலங்கை கடற்படைக்கு சொந்தமான விஜயபாகு கப்பலில் ஒப்படைக்கப்பட உள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 300 | 300 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 100 | 150 | 130 | 200 |
| தக்காளி | 800 | 650 | 650 | 600 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 170 | 140 | 100-120 | 200 |
| கோவா | 300 | 300 | 280 | 200 | 300 |
| கரட் | 300 | 550 | 550 | 400 | 600 |
| பூசணி | 50 | 180 | 180 | 150 | 200 |
| புடோல் | 160 | 300 | 150 | 180 | 300 |
| வாழைக்காய் | 160 | 200 | 150 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 400 | 350 | 300-500 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 250 | 200 |
| பாகற்காய் | 1500 | 700 | 1000 | 800 | 1200 |
| வெண்டக்காய் | 200 | 250 | 180 | 300 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 200 | 200 | 250-300 | 350 |
| லீக்ஸ் | 600 | 700 | 600 | 400 | 600 |
| பீற்றூட் | 600 | 600 | 650 | 500 | 700 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 1250 | 1000 | 700-900 | 1200 |
| போஞ்சி | 800 | 650 | 700 | 380 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 50 | 80 | 120 | 50 | 100 |
| தேசிக்காய் | 800 | 1000 | 1000 | 700-900 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 70 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 450 | 400 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | -- | 480 |
| முள்ளங்கி | 140 | 200 | 280 | 300 | 350 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 80 | 80 | 80 |
| [illegible] | 150 | 200 | 120 | 100 | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 521





இங்கே கொடு, அம்மா, துடுப்பை!" என்றான் வந்தியத்தேவன். அவனுடைய எண்ணத்தை அறிந்த இளவரசர் புன்னகை புரிந்தார்.

"நண்பனே! உன்னுடைய சூழ்ச்சிகள் எல்லாம் வீண்தான். நான் பழையாறைக்கும் போகப் போகிறதில்லை. தஞ்சாவூரையும் பார்க்கப் போகிறதில்லை. கடவுள் என்னைக் கைலாசத்துக்கே அழைத்துக் கொண்டு போய் விடுவார் போலிருக்கிறது!" என்றார்.

வந்தியத்தேவனும் பூங்குழலியும் பீதியடைந்து இளவரசரை உற்றுப் பார்த்தார்கள். அவர் உடம்பு நடுங்கத் தொடங்கியிருப்பதைக் கண்டார்கள்.

வந்தியத்தேவன் அவர் அருகில் சென்று, "ஐயா! இது என்ன? தங்கள் உடம்பு ஏன் நடுங்குகிறது?" என்று கேட்டான்.

"இது குளிர் காய்ச்சல், அப்பனே! இலங்கையில் இந்தக் காய்ச்சல் அதிகம் பரவியிருக்கிறது என்று சொன்னேனே, ஞாபகம் இல்லையா? இந்தச் சுரம் வந்தவர்கள் பிழைப்பது அரிது!" என்று சொன்னார் இளவரசர்.

கடல் நடுவில் கப்பலின் பாய்மரம் இடிவிழுந்து பற்றிக் கொண்ட போதுகூட, வந்தியத்தேவன் அவ்வளவு கலக்கம் அடையவில்லை. இளவரசரின் வார்த்தைகள் அவ்வளவாக அவனை இப்போது கதிகலங்கச் செய்து விட்டன.

பூங்குழலியின் கையிலிருந்து துடுப்புத் தானாக நழுவிட்டது. உடம்பில் ஜீவசக்தி அடியோடு மங்கிவிட்டது. கண்களில் மட்டுமே உயிரின் ஒளி தோன்றியது. அந்தக் கண்களினால் இளவரசரை வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

இளவரசரின் உடல் நடுக்கம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் தூக்கித் தூக்கிப் போட ஆரம்பித்தது.

"ஐயா! நான் என்ன செய்யட்டும்? சொல்லுங்கள்! ஒன்றும் புரியவில்லையே? படகை எங்கே கொண்டு போகட்டும்? பூங்குழலி! கோடிக்கரையில் வைத்தியர் இருக்கிறார் அல்லவா?" என்று வந்தியத்தேவன் பதறினான்.

பூங்குழலியோ பேசாமடந்தை ஆகியிருந்தாள். இளவரசர் திடீரென்று குதித்து எழுந்தார். நடுங்கிக் கொண்டிருந்த அவர் உடம்பு இப்பொழுது நிற்க முடியாமல் தள்ளாடியது.


"என்னை என் தமக்கையிடம் கொண்டு போங்கள்! என்னை உடனே இளைய பிராட்டியிடம் கொண்டு போங்கள்!" என்ற வார்த்தைகள் அவருடைய வாயிலிருந்து குளறலாக வெளிவந்தன.

இதைக்கேட்ட வந்தியத்தேவன் குதூகலம் அடைந்தான். அந்தக் குதூகலத்தில் இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றான்.

நடுக்கத்துடன் ஆடிக்கொண்டு நின்ற இளவரசர் அடுத்த கணத்தில், "அக்கா! இதோ வருகிறேன்! உன்னைப் பார்க்க இதோ வருகிறேன்! யார் தடுத்தாலும் இனிமேல் கேட்கமாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே படகிலிருந்து கடலில் பாயப் போனார்.


நல்லவேளையாக வந்தியத்தேவன் அப்போது நிலைமை இன்னதென்பதை உணர்ந்தான். இளவரசர் சுரத்தின் வேகத்தினால் சுய உணர்வு இழந்து விட்டார் என்பதை அறிந்து கொண்டான். கடலில் பாயப் போனவரைச் சட்டென்று பிடித்து நிறுத்தினான்.

ஏற்கெனவே மிக்க பலசாலியான இளவரசர், இப்போது சுரத்தின் வேகத்தினால் பன்மடங்கு அதிக பலம் பெற்றிருந்தார். வந்தியத்தேவனுடைய பிடியிலிருந்து திமிறிக் கொள்ள முயன்றார். தன்னால் மட்டும் அவரைத் தடுக்க முடியாது என்பதை வந்தியத்தேவன் கண்டு, "பூங்குழலி! பூங்குழலி! சீக்கிரம் ஓடி வா!" என்று அலறினான். (தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## முடவனைச் சுமந்தவள்



தாரா எனும் நகரத்தில் சத்தியவிரதன் என்ற ஒரு வேதியன் தன் மனைவியோடு வாழ்ந்து வந்தான். அவன் மனைவி அருகில் இருப்போரிடம் சண்டையும் கலகமும் செய்து கொண்டிருந்ததால், அந்த வேதியன் வேறு நகரத்திற்குச் சென்றான். செல்லும் வழியில் அவளுக்குத் தண்ணீர் தாகம் எடுக்க அவனிடம் தண்ணீர் வேண்டும் எனக் கேட்டாள். அவன் தண்ணீர் கொண்டு வர வேகமாகச் சென்றான். ஆனால் அவனால் வெகு நேரம் கழித்தே தண்ணீர் கொண்டு வர முடிந்தது. அதற்குள் அவள் இறந்து விட்டாள்.

வேதியன் அழுது புலம்பினான். அப்போது வானில், உன் வயதில் இவளுக்குப் பாதியைக் கொடுத்தால் இவள் மீண்டும் உயிர் பெறுவாள் என்று ஓர் அசரீரி ஒலித்தது. உடனே அவன் அவ்வாறே தருவதாகத் தன் மனதில் நினைத்துக் கொண்டான். அவள் உயிர் பெற்றாள். பின்னர் அவள் அவன் கொண்டு வந்த தண்ணிரைப் பருகி விட்டு பயணத்தைத் தொடரலானார்கள். ஒரிடத்தில் அவளைத் தங்க வைத்து விட்டுக் கடைக்குச் சென்றான் வேதியன். தனியாக இருந்த அவளிடம் ஒரு முடவன் தவழ்ந்து வந்தான். அவன் இனிமையாகப் பாடினான். அவன் பாட்டில் மயங்கிய இவள் அவனுடன் இணைந்தாள்.

திரும்பி வந்த வேதியன் தனது மனைவியின் அருகில் ஒரு முடவன் இருப்பதைப் பார்த்து, வேதியனுக்கு முடவன் மீதும் தன் மனைவி மீதும் எந்தச் சந்தேகமும் ஏற்படவில்லை. இவனையும் நம்முடன் அழைத்துச் செல்லலாமா? என்று கேட்டாள். வேதியனும் சம்மதித்து மூவரும் புறப்பட்டனர். செல்லும் வழியில் வேதியன் ஒரு கிணற்றின் அருகில் சென்று கொண்டிருக்கும் போது, அவள் வேதியனை அந்தக் கிணற்றில் தள்ளிவிட்டு விட்டு அந்த முடவனை ஒரு பெட்டிக்குள் அமரச் செய்து தன் தலையில் அவனைச் சுமந்துகொண்டு சென்றாள். வழியில் சென்ற காவலாளிகள், தலையில் பெட்டியுடன் செல்லும் அவளைச் சந்தேகப்பட்டு, ராஜாவிடம் அழைத்துச் சென்றனர்.

ராஜாவிடம், இவர் என் கணவர். இவரால் நடக்க முடியாது. மனைவி என்ற முறையில் இவரை நான் தானே பாதுகாக்க வேண்டும்! என்றாள். இவளின் கற்புத் தன்மையைக் கண்டு கண் கலங்கிய ராஜா, அவளைத் தன் உடன் பிறந்தவளாகக் கருதி அவளையும் முடவனையும் அரண்மனையில் தங்க வைத்து உபசரித்தார்.

கிணற்றில் தள்ளி விடப்பட்ட வேதியன் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த பொழுது அவ்வழி யாக வந்த வழிப்போக்கன் தண்ணீர் தாகம் ஏற்பட அந்த கிணற்றிலிருந்து தண்ணீர் பருக நினைத்துக் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தான். கிணற்றுக்குள் இருந்த வேதியனைக் கண்டு, அருகிலிருந்த ஆட்களை அழைத்து கிணற்றில் குதிக்கச் சொல்லிக் காப்பாற்றினான். பின்னர் வேதியன் தன் மனைவியையும் அந்த முடவனையும் தேடிச் சென்றான்.

அரண்மனை மாடத்திலிருந்த வீதியில் செல்லும் வேதியனைப் பார்த்த அவனது மனைவி, அரண்மனைக் காவலர்களிடம் சென்று, அதோ அந்த வேதியன், என்னையும் முடமாகவுள்ள என் கணவரையும் கொல்ல வருகிறான் என்று கூறினாள். அவர்கள் வேதியனைப் பிடித்து ராஜாவின் முன் நிறுத்தினர். ராஜா நீதி விசாரணைக்கு உத்தரவிட்டார். வேதியனைத் தீரவிசாரித்த நீதிபதி உண்மையை அறிந்து கொண்டு, ராஜாவிடம் கூறினார். ராஜா வேதியனை விடுவித்து, வேதியனின் மனைவியையும், முடவனையும் தண்டித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான மனம் படைத்தவனே உன்னதமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் அமைத்துக் கொள்கிறான். – நார்மன் வின்சென்ட் பீல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் நிலைப்பாடு என்ன?

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுங்கள் எனத் தேர்தல் ஆணைக்குழு சங்கு நாதம் ஊதியுள்ளது.

ஏலவே ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராக இருந்தவர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தலோடு களமிறங்கத் தயாராகிவிட்டனர்.

இனி ஜனாதிபதித் தேர்தல் எப்போது என்ற அறிவித்தல் மட்டுமே காத்திருக்கிறது.

தேர்தல் தொடர்பில் இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க, தம்மிக்க பெரேரா ஆகியோர் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

இதில் தமிழ்த் தரப்பில் ஒரு பகுதியினர் பொது வேட்பாளரை நிறுத்துகின்ற முயற்சியில் இறங்கியுள்ளனர்.

குறித்த தரப்பினர் பொது வேட்பாளரை நிறுத்துவார்களாக இருந்தால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் குறைந்தது ஐந்து வேட்பாளர்கள் போட்டியிடுவது உறுதியாகும்.

இங்குதான் ஒரு விடயத்தை நாம் வலியுறுத்தியாக வேண்டும்.

அதாவது, தமிழர் தரப்பு பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதாக இருந்தால், அது சார்ந்து 90 சதவீதமான தமிழ் மக்களின் ஒப்புதலை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தவிர, பொது வேட்பாளரை நாம் நிறுத்தும்போது, அதனால் தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் உடன்பாடில்லாத ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று விடுவாரா? என்பது குறித்தும் நாம் தீவிரமாக ஆராய வேண்டும்.

ஏனெனில், நாம் பொது வேட்பாளரை நிறுத்தும் போது, எம் இனத்துக்கு ஈனத்தைத் தந்த பேரினவாதத்தைச் சேர்ந்த அல்லது அவர்களுக்குச் சார்புடைய ஒருவர் ஜனாதிபதியாக வந்தால், அடுத்து வரும் ஐந்து வருடங்களும் தமிழ் இனத்துக்கு ஆபத்தான காலமாகவே இருக்கும்.

இதை நாம் கூறும்போது, பொது வேட்பாளரை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் தங்களின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறுவதாக அமையும் எனவும் அதன்மூலம் சர்வதேசத்தின் உதவி எமக்குக் கிடைக்கும் என்றும் காரணம் கூறப்படுமாயின், அது கற்பனையானதேயன்றி வேறில்லை என்பதுதான் உண்மை.

ஆம், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் வீதியில் கிடந்து கெஞ்சி மன்றாடி எங்களை விட்டுப் போகாதீர்கள். நீங்கள் போனால் நாங்கள் கொல்லப்பட்டு விடுவோம் என மன்றாடியபோதும் சர்வதேசத் தொண்டு அமைப்புகள் எங்கள் மக்களை நடுத்தெருவில் விட்டு ஓடிப் போயின.

தவிர, இன்றுவரை உலக நாடுகள் இலங்கை ஆட்சியாளர் பக்கம் நிற்பதேயன்றி நம்மை ஒரு பொருட்டாகப் பார்க்கவில்லை.

நிலைமை இதுவாக இருக்கும்போது, எழுந்தமானமாக தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால், அது மிக மோசமான விளைவை ஏற்படுத்திவிடலாம்.

எனவே பொது வேட்பாளர் என்ற விடயத்தில் தமிழ் மக்களிடம் கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும்.

ஏனெனில் எம் மக்களின் தீர்ப்புத்தான் இறுதியானதும் உறுதியானதுமாகும்.

# நாட்டின் உண்மை நிலையை மறைத்து மக்களிடம் அரசாங்கம் நாடகமாடுகிறது

## நடிப்பில் ஆட்சியாளர்கள் அமிதாப் பச்சனையே மிஞ்சிவிட்டதாக சஜித் சாடல்

நாட்டின் நிலை குறித்த உண்மைத் தகவல்களை மக்களிடம் இருந்து மறைத்து அரசாங்கமானது அமிதாப் பச்சனை விடவும் திறம்பட நடித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளதாவது எமது நாட்டில் வெளிநாட்டுக் கடன், இருதரப்பு கடன் மற்றும் பலதரப்பு கடன் என வகைப்பட்டு காணப்படுகின்றது.

இருதரப்பு கடன் பாரிஸ் கிளப் மற்றும் பாரிஸ் கிளப் சாராத கடன் என வகைபட்டுள்ளது. மேலும் சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களும் உள்ளனர்.

இது குறித்து மக்களுக்கு அதிகம் தெரியாது. பிள்ளைகளுக்கு ஸ்மார்ட் தொழிநுட்ப சாதனம் இருக்குமாக இருந்தால், இந்த தரவுகளை அணுக முடியும். இன்று நாட்டில் காலை வாரும் விளையாட்டே நடந்து வருகின்றது. இந்த தரப்பினரில் ஒருவருடன் மாத்திரம் இணக்கப்பாட்டை மேற்கொள்வதன் மூலம் வங்குரோத்து நிலையிலிருந்து வெளிவர முடியாது.

சர்வதேச இறையாண்மை பத்திரதாரர்களுடன் எமது நாடு நிலையான எந்தவொரு இணக்கப்பாட்டையும் மேற்கொள்ளவில்லை. உலகில் தலைசிறந்த நட்சத்திர நடிகர்கள் இருந்தாலும், எமது நாட்டில் ஆட்சியாளர்களே சிறந்த நடிகர்களாக திகழ்ந்து வருகின்றனர்.

எமது ஆட்சியாளர்கள் அமிதாப் பச்சனையும் தாண்டிய நடிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, உண்மையை உண்மையாக உடனே அறிய வேண்டியது மக்களின் பொறுப்பாகும்.

இந்த அரசாங்கம் சில தரவுகளை மறைத்துள்ளது. ஊழியர் சேமலாப நிதிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த தகவல்கள் கூட இதுவரை வெளியிடப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (ம-7)

# கச்சதீவை இந்திய அரசாங்கத்துக்கு இரகசியமாக விற்று விட்டீர்களா?

## அரசிடம் சட்டத்தரணி அருன்ஹேமச்சந்திர கேள்வி

(கொழும்பு)

இலங்கைக்கு சொந்தமான கச்சதீவை இந்திய அரசாங்கத்துக்கு இரகசியமாக விற்றுள்ளார்களா என சந்தேகம் எழுவதாக கிழக்கு மக்களின் குரல் அமைப்பின் அமைப்பாளர் சட்டத்தரணி அருன்ஹேமச்சந்திர தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இந்திய மீனவர்களின் தாக்குதலால் இலங்கை இராணுவ படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 1921ம் ஆண்டிலிருந்து இலங்கைக்கே உரித்தான கச்சதீவு 1972ம் ஆண்டு உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு சொந்தமாக்கப்பட்டது.

இந்திய தேர்தலின் போது கச்சதீவை மீட்போம் என பாரதிய ஜனதா கட்சியினர் உறுதியளித்திருந்தனர்.

தேர்தலின் பின் அது தற்போது பெரும் பேசு பொருளாக மாறியுள்ளது. ஆட்சியாளர்கள் சுய இலாப நோக்கத்துக்காக வாழ்கிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நரேந்திரமோடி அருகாமையில் இருக்கும் போது ஒரு கதையையும் மக்களிடத்தில் ஒரு கதையினையும் கூறி வருகிறார்.

இலங்கை அரசாங்கம் தெளிவான விளக்கத்தை கூற மறுத்திருக்கிறது வடகிழக்கு பிரதேசம் இந்தியாவுடன் சேர்ந்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி கூறுகிறார் ஆனால் சில விடயங்களை ஏற்க முடியாது.

இவ் விடயத்தில் தேசப்பற்று மக்கள் கரிசனை இல்லாமல் ஈடுபடுவார்களானால் கிழக்கு மக்கள் என்ற ரீதியில் தொடர்ந்தும் இது விடயத்தில் போராடுவோம் என்றார். (ம-7)

## சாவகச்சேரியில் விபத்து வைத்தியர் படுகாயம்

யாழ். சாவகச்சேரி A9 வீதி நுணாவில் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் வைத்தியர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த காரும், சாவகச்சேரியில் இருந்து யாழ்ப்பாண நோக்கி பயணித்த மோட்டார்சைக்கிளும்மோதியதாலே இந்த விபத்து நேர்ந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த வைத்தியரே இவ்வாறு படுகாயம் அடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## பெருந்தொகை போதைவஸ்துகளுடன் சந்தேக நபரொருவர் கைது

(பண்டாரவளை)

1460 ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் பொதிகளுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டதாக பண்டாரவளை பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மவுண்ட் பகுதியில் வசிக்கும் 33 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் 440 ஐஸ் போதைப்பொருள் பொதிகளும் 1020 ஹெரோயின் போதைப்பொருள் பொதிகளும் மீட்கப்பட்டுள்ளன.

பதுளை பண்டாரவளை, ஹப்புத்தளை, வெலிமடை, எல்ல மற்றும் ஏனைய பல பகுதிகளுக்கு விநியோகிப்பதற்காக இந்த போதைப் பொருள்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த சந்தேக நபர் தனது சகோதரிக்கு பிறந்த நாள் பரிசாக கொடுக்கும் போர்வையில் போதைப் பொருளை பார்சல் செய்து கூகுள் மப் உதவியுடன் விநியோகித்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## பேருந்து கட்டணம் குறைக்கப்படுகின்றது

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பேருந்து கட்டணம் குறைக்கப்படுவதாக அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார்.

தேசிய பேருந்து கட்டணக் கொள்கையின் பிரகாரம் இந்த கட்டண குறைப்பு நடைமுறைப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பேருந்து கட்டணம் 5.27% குறைக்கப்படும் எனவும், இதன் விளைவாக குறைந்தபட்ச பேருந்துக் கட்டணம் 30 ரூபாவில் இருந்து 28 ரூபாவாக மாறும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேசமயம், மக்களிடம் நாங்கள் ஒரு சிறப்பு வேண்டுகோள் வைக்கிறோம், நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் பேருந்துக் கட்டணக் குறைப்பின் பயனை முழுமையாக பயணிகள் பெற வேண்டுமானால், அவர்கள் சில்லறைப் பணத்தை கொண்டு வர வேண்டும்.

இல்லையெனில், 30 ரூபாவாக இருந்த பேருந்துக் கட்டணம் 28 ரூபாவாக மாற்றப்பட்டாலும் கூட, இந்த இரண்டு ரூபாய் பிரச்சினை இருக்கும். மேலும் ஒவ்வொரு கட்டணத்திலும், இந்த இரண்டு, மூன்று மற்றும் ஐந்து ரூபாய் போன்ற நாணயங்களை மாற்றுவதில் சிக்கல் இருக்க வாய்ப்புள்ளது என அஞ்சன பிரியஞ்சித் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி – பகுதி V


**கலாநிதி க.தவலிங்கம்**

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.


06

பிரதிநிதி தமது தொகுதிக்குள் உள்ள வாக்காளர்கள் சார்பாக சட்டவாக்க சபைக்குள் பிரதிநிதித்துவத்தை மேற்கொண்டு வாக்காளரின் நலனுக்காக நடவடிக்கையை டுப்பாரென நம்பப்படுகின்றது. அவர்கள் நடவடிக்கையெடுக்க வேண்டியவிதம் குறித்த இரண்டு கருத்துக்கள் காணப்படுகின்றன.

பிரதிநிதிதான் சட்டவாக்கச் சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்ட தேர்தல் தொகுதியின் விருப்பத்திற்கமைய நடந்து கொள்ளல் வேண்டுமென்பது ஒரு கருத்தாகும். அது தொடர்பாகவுள்ள அடுத்த கருத்துயாதெனில் பிரதிநிதி தமது தொகுதிக்கு சிறந்தவை யெனத்தான் கருதுகின்றவிதத்தில் நடந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தாகும்.

நிகழ்காலத்தில் அரசியல் கட்சிகள் என்ற அமைப்புக்களின் சில கொள்கைகளின் அடிப்படையில் நடவடிக்கையெடுப்பதற்கு, அங்கத்தவர்களாக அவற்றோடு இணைந்து நடவடிக்கை எடுப்பவர்கள் தேர்தல்களின் போது கட்சியினால் தேர்தலுக்கான வேட்பாளர்களாக முன் வைக்கப்படுகிறார்கள்.

இப் பணியின்போது அரசியல் கட்சிகள், இடைத்தரகர்களாக செயற்படுவதனால் அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்படுகின்ற வேட்பாளர்களில் ஒருவரை நிகழ்கால தேர்தல்களின் போது தமது வாக்கினை வழங்கி தேர்ந்தெடுக்க வேண்டிய நிலை வாக்காளருக்கு ஏற்பட்டுள்ளது.

தேர்தல் முறைமைகளுக்கமைய மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பெருமளவிலான முறைமைகள் உலகெங்கும் செயற்படுவதைக் காணமுடிகின்றது. உலக நாடுகளில் காணப்படுகின்ற அத்தகைய முறைமைகளில் ஒன்றுக்கு ஒன்று முரணான விடயங்கள் பல காணப்பட்ட போதிலும் அவை அனைத்தும் முக்கியமாக பெரும்பான்மை முறைமை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவமுறைமை என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றது.

**பெரும்பான்மை முறைமை**

இம் முறைமைகளில் பெரும்பான்மை முறைமையின் கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக் கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்படுகின்றார். (First Past the Post System – FPP) அவர் உரிய தேர்தலில் செல்லுபடியான வாக்குகளில் அறுதிப் பெரும்பான்மையொன்றை (Absolute Majority) பெற்றிருக்கின்றார் எனக்கருத்தில் கொள்ளப்படமாட்டாது. "இது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை" எனவும் அழைக்கப்படுகின்றது.

அதாவது எளிய பெரும்பான்மை தேர்தல்முறை என்பது ஒரு தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்களில் யார் அதிக வாக்குகளைப் பெறுகிறாரோ அவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும் போது அவரை எதிர்த்துப் போட்டியிட்ட வேட்பாளர்கள் யாவரும் சேர்ந்து பெற்ற வாக்குகளைச் சேர்த்துப் பார்த்தால், பல சமயம் அது வெற்றி பெற்றவர் பெற்ற வாக்குகளைவிடக் கூடுதலாக இருப்பதுண்டு. எனவே அந்த தொகுதியில் சிறுபான்மை வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெற்று அந்தத் தொகுதியின் பிரதிநிதியாகச் செல்லும் நிலை ஏற்படுகிறது. இந்த முறைமை "பெரும்பான்மைக்கு அதிகாரம்" என்ற ஜனநாயகத்தின் அடிப்படைக்கு எதிராக உள்ளது. இந்த தேர்தல் முறையே பங்களாதேசத்தில் நடைமுறையில் உள்ளது.

இத் தேர்தல்முறை இரு கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறைக்கு மட்டுமே பொருத்தமானதாக இருக்குமென கருதப்படுகின்றது. ஆனால், ஒரு தொகுதியில் பல கட்சிகள் போட்டியிடும் தேர்தல் முறைக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவ தேர்தல் முறை சிறப்பானதாகும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை என்பது ஒரு குறிப்பிட்ட தொகுதி மக்களினால் அளிக்கப்பட்ட வாக்குகளில், வேட்பாளர்கள் பெறும் வாக்குகளின் விகிதாசாரத்துக்கு அமைய வெற்றியாளர்களைத் தெரிவு செய்யும் ஒரு தேர்தல் முறையாகும்.

**பங்களாதேசத்து தேர்தல் முறை**

ஒரு நாட்டின் அரசியல் அமைப்பின் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்று தேர்தல் முறை. இது ஒரு தேசத்தின் அரசியல் அமைப்பின் சில உள் கருத்தை குறிக்கிறது. வங்கதேசம் 1971 இல் சுதந்திரம் பெற்றது. அதன் பிறகு 1972 இல் வங்காளதேசம் தனது முதல் அரசியலமைப்பைப் பெற்றது. ஆரம்பத்தில் முதன்மை அரசியலமைப்பின் படி அரசாங்கம் பாராளுமன்ற இயல்புடையது.

நாடு முழுவதும் பொதுத் தேர்தல் நடத்தும் முறை இருந்தது. இதன் மூலம் மக்கள் தங்கள் சொந்தப் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க முடியும். தேசிய பாராளுமன்றம் ஒரு சபை மற்றும் 300 உறுப்பினர்களைக் கொண்டது. முழு நாடும் 300 தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது. பிரிவினைக்கு சில சமயங்களில் மக்கள் தொகையும் வேறு சில சமயங்களில் பிரதேசமும் கருதப்பட்டது. அதிக பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சி அமைக்கும்.

ஜனாதிபதி நாட்டின் தலைவராக இருப்பார். பிரதமர் அரசாங்கத்தின் தலைவராக இருப்பார். அதன்பின் அரசியலமைப்பின் 4ஆவது திருத்தத்தின் மூலம் பாராளுமன்ற முறைக்குப் பதிலாக ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது தவிர, பல கட்சி முறைக்குப் பதிலாக ஒரு கட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டு, பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன.

பின்னர் 1990 வரை இராணுவ சர்வாதிகாரிகள் இருந்தனர். 1991 இல் வங்காளதேசம் அதன் 1ஆவது ஏற்றுக்கொள்ளக்கூடிய தேர்தலை நடத்தியது. அது 1991 இல் பன்னிரண்டாவது அரசியல் அமைப்பு திருத்தம் நிறைவேற்றப்பட்டு மீண்டும் பாராளுமன்ற முறைக்கு திரும்பியது. பிரதமர் தலைமையிலான அரசாங்கத்தின் பாராளுமன்ற வடிவத்திற்கு மாறியது.

அரசியலமைப்பின் 65 வது பிரிவின்படி, ஒரு பாராளுமன்றம் (ஜாதியோ சங்சாத் என அழைக்கப்படுகிறது) உள்ளது. அதில் அரசியலமைப்பின் விதிகளுக்கு உட்பட்டு, குடியரசின் சட்டமியற்றும் அதிகாரங்கள் உள்ளன. பாராளுமன்றம் ஒற்றை உறுப்பினர் பிராந்திய தொகுதிகளிலிருந்து சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட முந்நூறு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

அதாவது ஒவ்வொரு பாராளுமன்றத் தொகுதியில் இருந்தும் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். இவரை நேரடி வாக்கெடுப்பின் மூலம் பொதுமக்கள் தேர்ந்தெடுப்பர். அதிக வாக்குகள் பெற்ற வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக அறிவிக்கப்படுவார். ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஐந்தாண்டு காலம் பதவியில் இருப்பர். ஐந்தாண்டு காலம் முடிந்ததும், அனைவரின் பதவிக்காலமும் முடிவடையும்

இது தவிர 2000 ஆம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பினர்களால் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பெண் உறுப்பினர்களுக்கு பிரத்தியேகமாக முப்பது இடங்கள் ஒதுக்கப்பட்டது. விரைவில் கலைக்கப்படாவிட்டால் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டு புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படலாம், அவர் தனி வேட்பாளராகவோ, கட்சி சார்ந்த வேட்பாளராகவோ இருக்கலாம். ஒரு உறுப்பினர் தொடர்ந்து 90 நாட்கள் சபைக்கு வராத பட்சத்தில் அவரது பதவி பறிக்கப்படும். பாராளுமன்ற உறுப்பினரின் தகுதியை பங்களாதேசத் தேர்தல் ஆணையம் சரிபார்க்கும்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பொதுத் தேர்தல் பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தொண்ணூறு நாட்களுக்குள் நடத்தப்படும். ஒருவர் வங்காளதேசத்தின் குடிமகனாக இருபத்தைந்து வயதை எட்டியிருந்தால், அவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்.

எந்த ஒரு நபரும் ஒரே நேரத்தில் ஐந்து தொகுதிகளுக்கு மேல் வேட்பாளராக இருக்க முடியாது. ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளைப் பொறுத்தமட்டில் எந்த ஒரு நபரும் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கக் கூடாது என்றும் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிட அனுமதி உண்டு என்று அரசமைப்புச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் வெற்றிபெறும் பட்சத்தில், ஒரு தொகுதியைத் தவிர ஏனைய தொகுதிகளில் உறுப்பினர் பதவியில் இருந்து விலக வேண்டும். மறுதேர்தல் நடத்தப்பட்டு மற்றொருவர் தேர்ந்தெடுக்கப்படுவார். கட்சித் தலைவர்களும், முக்கிய நபர்களும் ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளில் போட்டியிடுவது வழக்கமாக உள்ளது.

பிரதமரையும், அவரது அமைச்சரவையையும் குடியரசுத் தலைவர் நியமிப்பார். பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுபவரும், பிற அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களாக தேர்வானவர்களாக இருக்க வேண்டும். குடியரசுத் தலைவர் பாராளுமன்ற அவையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றவரை பிரதமராக நியமிப்பார். அமைச்சரவை தன் செயற்பாடுகளுக்கான விளக்கத்தை பாராளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கழுத்தில்...

ஒருவரை காணவில்லை என மாமடுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இளைஞன் நேற்று தூக்கிட்டு மரணித்த நிலையில் நந்திமித்திரகம பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டார்.

தனது 15 வயது காதலியை மிரட்டுவதற்காக கழுத்தில் கயிற்றை மாட்டிய நிலையில் குறித்த கயிறு இறுகி மரணித்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட இளைஞனின் சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## புதையல்...

வைத்து பூசாரி உட்பட 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸாருக்கு கிடைத்த விசேட தகவலையடுத்து விளாத்திக்குளம் பகுதியில் இரவு விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டபோது புதையல் தோண்டுவதற்கு முற்பட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பகுதியில் இருந்து வருகை தந்த பூசாரி மற்றும் வவுனியாவின் தவசிக்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நால்வருமாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த 5 பேரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

## வவுனியா...

மில் வீதி சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குறித்த சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த வவுனியா, ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த லியோசியஸ் டெல்சன் என்பவர் வைத்தியசாலையில் ஊசி போடுவதற்கு பயந்து வைத்தியசாலையில் இருந்து விடுகை பெறாது இரவு தப்பி வீடு நோக்கி சென்றுள்ளார்.

இந்நிலையில் வவுனியா, கோவில் புதுக்குளம், ராணி மில் சந்தியில் மரணமடைந்த நிலையில் சடலம் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அச்சடலத்தை மீட்டனர்.

வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியால் சென்ற வாகனம் குறித்த நபர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் இதன் காரணமாகவே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தொடர்ந்தும் வவுனியா பொலிஸார் மற்றும் போக்குவரத்து பொலிஸார் ஆகியோர் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,250)

## காணாமல்...

நீராடுவதற்காக காணாமல்போன சிறுவனும் அவனது சகோதரன் மற்றும் இரு நண்பர்களுமாக சென்றுள்ளனர்.

காலை 11.30 மணியளவில் நீராடச் சென்ற இவர்களில் 14 வயதுடைய சிறுவன் நீரில் மூழ்கிய நிலையில் அருகில் உள்ள இராணுவ முகாமிற்கும் உறவினர்களிற்கும் தகவல் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் குறித்த சிறுவனை தேடும் பணியில் இரணைமடு மீனவர்களும், பிரதேச மக்களுமாக நீண்ட நேரமாக தேடி வந்த நிலையில் நேற்று முன்தினம் மீட்க முடியாது போனது.

நேற்று மீண்டும் தேடப்பட்ட நிலையில் குறித்த சிறுவன் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,100)

## மின் கட்டணம்...

இறுதித் தீர்மானம் எதிர்வரும் 15ஆம் திகதி அறிவிக்கப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மின் கட்டண குறைப்பு தொடர்பில் மக்கள் எழுத்து மூலம் யோசனைகளை முன்வைக்கும் காலம் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. (ம-7)

## 1.5 பில்லியன்...

அதிகமான கடன்களை இலங்கை பெற்றுக் கொள்ளவுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் இலங்கை இந்த வாரம் ஒப்பந்தம் செய்து கொண்டது.

அத்துடன், பிரான்ஸ், இந்தியா மற்றும் ஜப்பான் இணைந்து தலைமை தாங்கிய பாரிஸ் கிளப் தலைமையிலான உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவுடனும் இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே சீனாவின் இந்த கடன் வசதி இலங்கைக்கு கிடைக்கவுள்ளது.

இந்தநிலையில், மூன்று வருடங்களுக்கும் மேலாக தாமதமாகிவரும் கடவத்தை - மீரிகம அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதற்கான நிதியும் கிடைக்கக்கூடிய கடன்களில் அடங்கும் என்று திறைசேரி தெரிவித்துள்ளது.

அத்துடன், கிடப்பில் போடப்பட்டுள்ள வேறு சில வீதிப்புனரமைப்புத் திட்டப் பணிகளும் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (ம-7)

## மக்...

டாரநாயக்க தனது 80ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தனது முகநூல் கணக்கில் பதிவொன்றினையிட்டு இதனைக் கூறியுள்ளார்.

அதில் "இன்று நான் இந்த பூமியில் எழுபத்தொன்பதாவது வயதைக் கடந்து எண்பது வயதை எட்டியுள்ளேன். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் என் நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காகவும் பல விடயங்களைச் செய்திருக்கின்றேன்.

நான் பல விடயங்களை செய்திருக்கின்றேன். அவற்றில் சிலவற்றை நான் மறந்துவிட்டேன் என்றால், நாட்டு மக்கள் அவற்றை நினைவில் வைத்திருப்பதை எண்ணுவது நகைப்புக்குரியது.

ஆனால் இன்று முழுவதும் எனக்கு கிடைத்த வாழ்த்துக்களில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் என்னை நேசிக்கும் சிலரது நினைவுகள் எனக்கு ஒரு விடயத்தை தெளிவுபடுத்தியது.

நான் செய்தது, சொன்னது எல்லாம் ஞாபகம் இல்லாவிட்டாலும், பலருக்கு இன்னும் நினைவில் இருக்கும் பொதுவான ஒன்று இருக்கின்றது. அதுவே இந்த நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் எனக்குள்ள உண்மையான அன்பு. அது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

பல தசாப்தங்களாக பல விமர்சனங்கள் மற்றும் அவதூறுகள் இருந்த போதிலும், நாட்டிற்கான எனது கடமையை நிறைவேற்றுவதற்கான வலிமையை உங்கள் அன்பே எனக்கு வழங்கியதாக இன்றும் நான் நம்புகிறேன். அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1363)

Golden Real Estate (pvt) Ltd
077 029 4164,
077 329 4130, 077 294 1521

V2 VISA SERVICES
கனடா
077 71 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0712)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(126)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0712)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0712)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241


## மரண அறிவித்தல்

மலர்வு
17 - 03 - 1950



உதிர்வு
30 - 06 - 2024

### மகாலிங்கம் இராசமலர் (இராசாத்தி)

குடத்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும் சந்தாதோட்டம் புலோலி வட கிழக்கு புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் இராசமலர் (இராசாத்தி) அவர்கள் நேற்று 30.06.2024 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தன் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - யோகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் கந்தசாமி, கிருஷ்ணபிள்ளை (ஓய்வு பெற்ற இ.போ.ச சாரதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுமதி(ஆசிரியை - யா/புலோலி கிழக்கு அ.த.க பாடசாலை), சுதாகரன் (ஜேர்மனி), சுதாதரன் (ஜேர்மனி), சுதாபரன்(லண்டன்), சுகந்தி(அபிவிருத்தி உத்தியோகத்தர் மாவட்ட செயலகம் முல்லைத்தீவு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பேமராஜ் (சமுர்த்தி முகாமையாளர் பிரதேச செயலகம் கரவெட்டி), விஜயஸ்ரீ (ஜேர்மனி), ஜஸ்மின் (ஜேர்மனி), ஸ்ரீதரன் (ஆசிரியர், செம்மலை மகா வித்தியாலயம் - முல்லைத்தீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும் மனோஜன், சிவானுஜன், ராகவி, யதுர்சா, அபிசயா, சுமாஜா, ஜோய்ஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2024) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(127)

நல்லூர் ஆலய மகோற்சவ காலத்தில்

# வெளிவீதிச் சூழலின் புனிதத்தையும் பக்தர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துக

## யாழ். மாநகர சபையிடம் வேலன் சுவாமிகள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய மகோற்சவ காலத்தில், முருகப் பெருமான் வலம்வருகின்ற வெளி வீதிச் சூழலில் புனிதத்தையும் பக்தர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு யாழ் மாநகர சபையிடம் தவத்திரு வேலன் சுவாமிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையில்,

காலங்காலமாக நல்லூர் ஆலய மகோற்சவ காலத்தில் யாழ் மாநகர சபையானது தனது பணிகளை செவ்வனே சிறப்பாக நிறைவேற்றி வந்திருக்கிறது. ஆனால் இவ் வருடம் சிலரின் அழுத்தங்கள் காரணமாக, காலங்காலமாக பேணப்பட்டு வந்த சில நடைமுறைகளை யாழ் மாநகர சபையானது மாற்ற முயற்சிப்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

தன்முன் அனைவரும் சமம் என்ற நல்லூர் கந்தப்பெருமானுடைய தனித்துவத்தை பாதிக்கும் வகையில், ஒருசிலரை முருகப்பெருமான் வலம் வரும் வீதியில் பாதணிகளுடன் அனுமதிப்பது பல்லாயிரக்கணக்கான முருக அடியார்களின் மனதைப் புண்படுத்தும் செயலாகும்.

அத்துடன் அங்கபிரதிஸ்டை செய்கின்ற அடியவர்களுக்கு சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும், அத்துடன் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் நடமாடுகின்ற வெளிவீதியில் அத்தியாவசிய வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களை அனுமதிப்பது அடியவர்களின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிப்பதோடு பக்தர்களிடையே பாகுபாட்டையும் ஏற்படுத்தும் ஆகவே, காலங்காலமாக பேணப்பட்டு வந்த அதே நடைமுறைகளை இவ் வருடம் நல்லூர் மகோற்சவ காலத்திலும் நடைமுறைப் படுத்துமாறு யாழ் மாநகரசபையை வேண்டிக் கொள்கின்றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இரா.சம்பந்தன்...

உடல் நலக் குறைவு காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் நேற்று இரவு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னதாக இரா.சம்பந்தனுக்கு 3 மாத கால விடுமுறை வழங்க பாராளுமன்றில் முன்மொழியப்பட்டது.

அதன்போது, இரா.சம்பந்தன் சுகவீன முற்றிருப்பதாகவும் விடுமுறை வழங்குமாறும் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்த நிலையிலேயே அந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது. நல்லாட்சி அரசாங்க காலத்தில் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்திருந்தார்.

இலங்கையில் மிகவும் அரசியல் அனுபவம் வாய்ந்த தமிழ்த் தலைவர்களில் இரா.சம்பந்தன் முக்கிய இடம் வகித்தமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தனின் உயிரிழப்புக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ம-7)

## எரிபொருட்களின்...

நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஒரு லீட்டர் சுப்பர் டீசலின் விலை 22 ரூபாவால் குறைக்கப் படவுள்ளதுடன், அதன் புதிய விலையாக 355 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒட்டோ டீசல் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விலைகளில் மாற்றம் ஏற்படுத்தப்படவில்லை என இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## எந்த நேரத்திலும்...

ஐக்கிய மக்கள் சக்தி பொது மக்களுடன் இருப்பதால் தேர்தல் நடத்தும் நேரம் எமக்கு முக்கியமில்லை. எந்த தேர்தலுக்கும், எந்த சந்தர்ப்பத்திலும் தயார். ஐக்கிய மக்கள் சக்தியை விட்டுவிட்டு எவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய மாட்டார்கள்.

ஜனாதிபதிக்கு அந்த முயற்சி ஒரு கனவே. ஜனாதிபதியோ அல்லது வேறு யாரோ என்ன சொன்னாலும், ஐக்கிய மக்கள் சக்தி 220 இலட்சம் மக்களுக்கான தமது சேவைகளை முன்னெடுத்து வருகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அத்துடன், நாட்டை ஏமாற்றுவதற்கும், நாட்டு மக்களுக்கு பொய்யுரைப்பதற்குமே ஜனாதிபதி ஜூலை 2 ஆம் திகதி பாராளுமன்றத்தை கூட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயல்படும். எமது ஆட்சியின் போது இங்கு எட்டப்படும் இணக்கப்பாடு மக்களை மையமாகக் கொண்ட, சமூகத்திற்கு தீங்கு விளைவிக்காத மனிதாபிமான முற்போக்கான இணக்கப்பாடாக அமையும். இது சாதாரண மக்களை ஒடுக்கும் இணக்கப்பாடாக அமையாது. மக்களை வெற்றிபெறச் செய்யும் உடன்பாடாக அமையும் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாடே வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், குறிப்பிட்ட சிறிய தரப்பினரே வங்குரோத்தான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்கள் என்பன வெளிப்படத் தன்மை மற்றும் பொறுப்புக் கூறலை உயரிய பட்சமாக பேணியே எவ் வேளையும் முன் னெடுக் கப் பட்டு வருகின்றன என்றார். (ம-7)


KBK கந்தர்மடம் Northern Uni அருகில்
A/L பிரத்தியேக வகுப்பு | கணக்கீடு A/L 2026, 2025
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் ஆரம்பம்
01.07.2024 திங்கள் 04.30 Pm
(C-0711)
உங்களுக்கு பொருத்தமான நேரத்தில் மாலை நேர இரவு நேர வெளி மாணவர்களுக்கான Zoom வகுப்புகளும் நடைபெறுகின்றது.
வடக்கின் முதற்தர கணக்கீட்டு ஆசிரியர்
MR. BALAKAJEN SLTS
B.com(JAF), H.N.Dip-in-Acc (ATI)
Dip-in-Edu(OUSL), M.com (Hons), Acc.spl
- 077 4520 043

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (123)
076 825 7716 (ஆகாஸ்)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப... ...வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org